www.tamilarangam.net

சஞ்சீவி



# சஞ்சீவி

மலர் - 5


Chanchive 5 - மலர்



8 [illegible] RUE [illegible] COLOMBES
9[illegible]0 A[illegible]RES SUR -
SEINE : FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Chanchive



# சஞ்சீவி

மலர் - 5

மார்கழி — 1988

அட்டைப்படம் - சிவா -
விளக்கம் - ஆம் -

பூவுலகம் புத்துயிர் பெற
புனிதன் இவன் உதித்தான்...

## உள்ளடக்கம்

பக்கம்:


1 ஆசிரியர் பக்கம்.
2 தேவன் ஆரத்திலிருந்து சில வரிகள்.
3. திருக்குறள் விளக்கம்.
4 வாசகர் அரங்கம்.
6 சிரிக்க சிந்திக்க. (அன்பளிப்பு)
10 TAEKWON-DO I HOLSTBRO.
12 தேவ பாலனே. (கவிதை)
13 சஞ்சீவியின் பக்கம்.
14 சிறுவர் அங்கம்.
15 உண்மையின் மகிமை. (சிறுகதை)
17 வாழ்த்துகிறோம்.
18 எக்ஸ் கதிர்.
20 குறுக்கெழுத்துப் போட்டி இல: 5.
21 குறுக்கெழுத்துப் போட்டியாளர்கள், கருத்துக்கள்.
24 திருந்தினோ. (கவிதை)
25 DEN BEDRØVEDE MAND.
29 பீட்டர் வருகிறார். (கவிதை)
30 VALGET DEN 21. NOVEMBER.
33 குழந்தை பிறப்பதற்கு முன் அதன் வளர்ச்சி.
34 இத்தாலியின் மிதமிஞ்சிய குடிகாரர்கள்.
35 துடக்குக் கழிப்பு (சிறுகதை)
38 கவிஞர் தோக்கிலுடன் ஒரு சந்திப்பு
42 உடைப்பு (கவிதை)
47 புனர் ஜென்மம் (சிறுகதை)
50 வாக்குரிமை (சிறுகதை)
53 ஓவியம்
54 "




விலை

தமிழ் - டெனிஷ் நட்புறவுச் சங்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியர் பக்கம்

முதற்கண் 'சஞ்சீவி' வாசகர்கட்கு எமது உளம் கனிந்த நத்தார் வாழ்த்துக்கள். மலர் ஐந்து வெளி வரும் இவ்வேளையில் சஞ்சீவி தனது கருத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றது. டென்மார்க் வாழ் இளம் தலைமுறையினரின் அபூர்வ ஆற்றலைக் கண்டு மகிழும் அதே வேளை இவர்களின் தமிழ் மொழி ஆற்றல் அல்லது தமிழ்ச் சொற்களின் உண்மையான விளக்கத்தை தெரியாமல் இருக்கும் நிலையையும் கண்டு மிகவும் வேதனை அடைகிறது

ஒரு இனம் எப்போது தமது கலை, கலாச்சாரம், இலக்கியம், மொழி என்பனவற்றை மறக்கின்றதோ. (தெரிந்து கொள்ள முயலாத சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றதோ) அது தனது தன்மையிலிருந்து மாறுபடுகின்றது. இதற்காக டெனிஷ் மொழியைக் கற்கவேண்டாம் என்றோ, அல்லது டெனிஷ் கலாச்சாரத்தில் குறை கூறவோ நாம் முற்படவில்லை. மேலும் சஞ்சீவிதான் தமிழ் மொழி, கலை, கலாச்சாரத்தை இங்கு பாதுகாத்து நிற்கிறது எனவும் நாம் கூற முற்படவில்லை. சஞ்சீவி ஒரு விளைநிலமாகவே இருக்க விரும்புகிறது. இதில் பல புதிய கலை இலக்கியப் பயிர்கள் வளரவேண்டும். இவைகள் எமது இளம் தலைமுறையினரின் மத்தியில் ஆரோக்கியமான அறிவையும் எமது கலை கலாச்சாரத்தினையும் புரியவைக்கும் என நம்புகின்றோம்.

நாம் மேற் கூறிய காரணங்களுக்காக டென்மார்க்கில் சில சஞ்சிகைகள் வெளிவந்ததும், துரதிஷ்ட வசமாகத் தடைப்பட்டதும் வேதனைக்குரியதே. யார் இவர்கள் எனச் சஞ்சீவிக்கு முத்திரை பதிக்க நினைக்கும் நண்பர்களுக்கும், வாசகர்களுக்கும். "இலக்கியம் ஒரு வழி காட்டும் தெருப்பலகையல்ல" என ஈழத்து எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை அவர்கள் கூறியது போல் சஞ்சீவியும் ஒரு வழிகாட்டும் தெருப்பலகையல்ல, என்பதைமட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறது சஞ்சீவி இன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓர் குழந்தை. இதனை வளர்க்கும் பெற்றோர்கள்தான் வாசகர்களாகிய நீங்கள், என்பதை எல்லோரும் அறிவீர்கள் சஞ்சீவியில் நாடுபூராந்த (டென்மார்க்) எழுத்தாளர்களின் எழுத்துருக்கள் இடம் பெறுவதன் மூலம்தான் 'சஞ்சீவி' மக்கள் கலை இலக்கிய இதழாக மலரமுடியும், என்பது எமது கருத்து.

மேலும் நாம் இப்பத்திரிகைத் துறைக்கு புதியவர்கள் எனவே எமது இச் செயற்பாட்டின் தவறுகள் தென்படின் சுட்டிக்காட்டி நாம் திருந்த உதவுங்கள். விமர்சனங்கள் யாவும் நிதர்சனத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொள்வோம்..

நன்றி.

ஆசிரியர் குழு.

# தேவன் ஆரத்திலிருந்து சில வரிகள்...

செங்கமல வண்டுறங்க
தென்றல் தாலாட்டும் - அன்னை
செங்கரத்தில் தூங்குமுனை
நெஞ்சம் தாலாட்டும்.
நெஞ்சம் தாலாட்டும்..

ஆயர் நாளும் வருவார் - தினம்
ஆவின் பாலும் தருவார்.
நேயனாகப் பிறந்தீர் - எம்
ஏழ்மை பாதி பெருவோரே!
ஏழ்மை பாதி பெருவோரே!!

செங்கமல வண்டுறங்க
தென்றல் தாலாட்டும் - அன்னை
செங்கரத்தில் தூங்குமுனை
நெஞ்சம் தாலாட்டும்!
நெஞ்சம் தாலாட்டும்!!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# திருக்குறள் விளக்கவுரை

வெள்ளத்து அனைய மலர்நீட்டம், மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

பதவுரை:- மலர் நீட்டம் – நீர்பூகளின் தாளின் அளவு.
வெள்ளதத அனைய – நீரின் அளவாகும். அது போல்.
மாந்தர் தம் – மனிதர்களின். உயர்வு – உயர்வானது.
உள்ளத்த அனையது – அவர்களின் ஊக்கத்தின் அளவாகும்.

விளக்கவுரை:- நீர்பூக்களின் தாள் நீரின் அளவாம்
மனிதர் உயர்வு அவர் ஊக்கத்தின் அளவாகும்.

ஊக்கம் உடைமை
குறள் இல:- 5 [ஐந்து]



www.tamilarangam.net




அன்புடன் சஞ்சீவி ஆசிரியர் குழுவிற்கு!

டென்மார்க்கில் தரமான இலக்கிய சஞ்சிகை தொடர்ச்சியாக வர வேண்டும் என்ற உங்கள் ஆர்வத்துக்கும், அயராத உழைப்பிற்கும் எனது பாராட்டுக்கள். ஆரம்பத்தில் கவனக்குறைவால் ஏற்பட்ட சில தவறுகள் காலப்போக்கில் மாறும் என்ற வாசகர்களின் நம்பிக்கை வீண் போகாமல் பார்த்துக் கொள்ளவும். மாறுபட்ட சூழ்நிலை, கலாச்சாரம் வாழ்க்கை முறைகளில் வாழ்ந்து வரும் டென்மார்க் தமிழ் மக்களுக்கு "சிரிக்கச் சிந்திக்க" ஒரு நல்ல மருந்து. இது போல் இன்னும் தரமான சிந்தனைகள், சிந்தனைச் சிற்பிகள், சஞ்சீவி வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவீர்கள் என்பது எனது நம்பிக்கை.

இப்படிக்கு
அன்புடன்
வி.எஸ், ராகவன்.
(VideBæk)

அன்புடன் ஆசிரியர் குழுவிற்கு!

"சஞ்சீவி" 4ல் இருந்து தான் முழுமையாக நோய் தீர்க்கப் போகின்றது என்பது என் கணிப்பு. நல்ல வளர்ச்சி. "ஜோனி", "வசந்தராஜன்" க்கு எனது மனம் கனிந்த பாராட்டுக்கள். தேவனின் கட்டுரை நல்ல அம்சம். இன்னும் பெரிதாக ஓர் 4,5 பக்கங்களில் எழுதியிருக்கலாம். முரளி ஏமாற்றி விட்டார் என்பது என் கணிப்பு. இதழ் 5ல் பழைய முரளியை எதிர்பார்க்கின்றேன்.

மீரா.
Roskilde



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வணக்கத்துக்குரிய சஞ்சீவி குழுவினருக்கு,

தங்களின் நான்காவது மலர் மிகச் சிறப்பாக இருந்தது. இருந்தும் குறுக்கெழுத்துப் போட்டி என்னும் பகுதியை இடை எழுத்துப் போட்டி போல் மாற்றியது சிறு குழப்பத்தை உண்டு பண்ணிவிட்டது போல் இருக்கின்றது. இருந்தும் ஒரு புதுமையைக் கையாண்டது வரவேற்கத்தக்க விடயம். சஞ்சீவியில் சிரிக்கச் சிந்திக்க என்னும் பகுதி சஞ்சீவிக்கு மெருகூட்டுவதாகவே இருக்கின்றது.

சஞ்சீவி மேலும் மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

அன்புடன்
S ஜெகன்-Holstebro

அன்போடு பத்திரிகைக் குழுவினருக்கு!

தமிழ்-டனிஸ் நட்புறவுச் சங்கப் பத்திரிகைக் குழுவின் "சஞ்சீவி" கண்டேன். மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். "கடல் கடந்து நம் தமிழ் முழங்க வேண்டும்" என்று நாம் கர்ஜித்தது அன்று. பெறுபேற்றின் சில நல்ல உணர்வு கொண்ட எமது தமிழ் இளைஞர்கள் வெளியிட்டிருக்கும் சஞ்சீவி மூலம் காண்கின்றோம். எமது தமிழ் இளைஞர்கள் தமிழ் மொழியை மட்டுமல்ல, தமிழ் இலக்கியத்தையும் வளர்க்கின்றார்கள்.

ஆம்!

சிறுவர் பகுதி முதல், அறிவியல், சிறுகதை பயன்மிக்க சம்பவங்கள், கவிதைகள் குறுக்கெழுத்துப் போட்டிகள் வளர பல விடயங்கள் உள்ளடக்கியுள்ளது.

- நன்றி -

அன்புடன்
இராஜி-சண்முகநாதன்
- இலங்கை -

**யாத்திராகமம்:**
அத்தியாயம் 21. (12-16)

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடிப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.

கொலை செய்யாதிருப்பாயாக
விபசாரம் செய்யாதிருப்பாயாக.
களவு செய்யாதிருப்பாயாக.
பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக.

www.tamilarangam.net

# சிரிக்க சிந்திக்க

- அன்பளிப்பு -

முரளி

ஏறக்குறைய முப்பது பிள்ளைகளைக் கொண்ட ஒரு பாடசாலைப் பொழுது போக்கு நிலையம். Skole fritidsordningen. நல்ல சந்தோசமான உத்தியோகம். குழந்தைகளோடு வேலை செய்வதற்கும், குழந்தைகளுக்கு வேலை செய்வதற்கும் கொடுத்து வைக்க வேண்டும். ஆனால் குழந்தைகளோடு வேலை செய்வதும் குழந்தைகளுக்கு வேலை செய்வதும் மிகச் சாதாரண விடயங்களும் அல்ல. எனக்கு இங்கு வேலை கிடைத்திருப்பது ஏதோ நீண்ட காலக்கனவு நிறைவேறியது போன்ற உணர்வு. சிலவேளைகளில் குழந்தைகளைக் கொஞ்சம் கூடப் புரிந்து கொள்ள முடியாமலிருக்கும். சில வேளைகளில் அடிக்க வேணும் என்றும் என்னைத் தோன்றும். என்ன செய்வது இங்கே தானே ஒன்றும் செய்ய முடியாது என்பதால் குழந்தைகளோடு குழந்தைகளாகி ஒருவாறு எல்லாவற்றையும் சமாளித்து விடுவேன். சமாளித்துத்தான் ஆக வேண்டும்.

வழமை போல் ஒருநாள் குழந்தைகள் பல மேலிருந்த ஒரு மரப்பலகையிலிருந்து குதித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த இடமோ மிகவும் ஆபத்தான இடம். அவ்விடத்துக்கு ஏறிவிளையாடுவதற்கு அனுமதிக்கவோ கூடாது. அங்கு ஏதாவது நடைபெற்றால் எல்லாவற்றுக்கும் நானே பொறுப்பாளி. ஏதோ தெரியவில்லை எனக்கும் குதித்து விளையாட வேண்டும் போலிருந்ததால் நான் ஏதும் செய்யாமல் பார்த்துக் கொண்டிருக்கேன்.

திடீரென எனது பொறுப்பாளர் Tove என்னைக் கத்திக் கூப்பிட்டாள். எனக்கு நெஞ்சு 'திக்' 'திக்' என்றது. மறுபடி ஏதோ பேசப் போகுது என நினைத்துக் கொண்டு அவள் அருகில் போய் அமர்ந்து கொண்டேன். "சொன்னப் போலே வாற திங்கட்கிழமை எங்கடை Stella வுக்கு இங்கு கடைசி நாள், அத்தோடு அவளுடைய பிறந்த நாளும் வருகுது, அதாலே நாங்கள் எல்லாம் அவளுக்காக ஒரு fint fest வைக்க வேணும் அத்தோடு அவளுக்கு ஒரு நல்ல பரிசும் (fint gave) ஒன்றும் கொடுக்க வேணும் என்றும் யோசிக்கின்றோம், நீயும் அதற்குக் கொஞ்சப் பங்களிப்புச் செய்ய வேண்டும், நீ விரும்பினால்

www.tamilarangam.net

மாத்திரம் செய்யலாம், இல்லையேல் வேண்டவே வேண்டாம்" என்றாள் Tove.

இல்லை... இல்லை... நான் கட்டாயமாக எனது பங்களிப்பைச் செய்வேன்... அதுவும் என்னுடைய ஒரு சக வேலையாளருக்கு வரும் பிரிவு விடைக்கும், பிறந்த நாளுக்கும் கட்டாயம் எனது பங்களிப்பைச் செய்வேன் என உறுதியளித்து விட்டு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்த அந்த இடத்துக்கே மீண்டும் சென்றேன். குழந்தைகளோடு நின்றாலும் என் மனம் எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தது. மாதக் கடைசி கையில் காசுமில்லை "gave" என்றால் கொஞ்சக் காசு செலவழியப் போகுது ...கொஞ்சக் காசு செலவழிக்கின்றோம்.... மனுசி ஒன்று வேலை மாறுவதால் எனக்கு நூறோ இருநூறோ துண்டு விழப் போகுது.. என நினைத்தபடியே அன்றைய எனது வேலை முடிவடைந்தது.

வெள்ளி முடிந்து, சனியும் வந்து போனது, ஞாயிறு இரவு.. எனக்கு நித்திரையே வரவில்லை. நாளைக்கு வேலைக்கு எழும்புவதை விட என்ன வாங்கிக் கொடுக்கப் போகின்றார்கள் எனது பங்கு எவ்வளவோ வரப் போகின்றதோ என்ற நினைவுகளே அழுத்திட என் நித்திரையைக் குழப்பியது. ஏதோ எல்லோரோடும் ஒத்துப் போகவேணும் என நினைத்துக் கொண்டு படுத்துறங்கினேன்.

திங்கட் கிழமை சுமார் காலை 10 மணியிருக்கும் Stella வின் வைபவத்தையிட்டு அன்று அங்கு எல்லாம் விசேடமானவை, மேசைகள், கதிரைகள் வரிசை வரிசையாய் நிரல்படுத்தி அடுக்கினோம். ஆங்காங்கே சில மெழுகுதிரிகளும் அழகாகக் கொளுத்தி விட்டோம். இந்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் என்மனம் பரிசுத் தொகையைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது.

வைபவம் ஆரம்பமானது, Tove எழுந்து ஏதேதோ பேசினாள் குழந்தைகள் எல்லாம் சிரிக்கச் சிரிக்க ஏதோ சொன்னாள். இறுதியில் அந்த மேசையிலிருந்த அந்தப் பரிசைத் தூக்கி Stella விடம் கொடுத்தாள். Stella வின் முகம் புன்னகையால் மலர்ந்தது. மெல்லிய இளநீலப் பேப்பர் அதைச் சுற்றி பொன் மஞ்சள் நிறத்திலான நாடா. அதற்குள்த் தான் ஏதோ இருக்கின்றது. அந்த நாடாவை இழுத்து அந்தப் பேப்பரை மெல்லெனத் திறக்கின்றாள். நானும் குழந்தைகளும் மிகவும் அமைதியோடும் ஆவலோடும் பார்க்கின்றோம். அந்த அமைதியில் பேப்பர் சரசரக்கும் சத்தம் அந்த அமைதியை ஊராய் குலைக்கின்றது. எனக்கோ நெஞ்சு திக் திக் என்று அடித்துக்

www.tamilarangam.net

கொண்டது. பேப்பர் எல்லாம் பிரித்து முடிவடைகின்றது. மஞ்சள் நிறத்திலான ஒரு சின்னக் குட்டிச் சயிக்கிள், அதன் பின்கரியலில் ஒரு சின்னப் பூக்கன்று ஜன்னல் அருகே அழகுக்காக வைக்கப்படும் ஒரு அழகுசாதனப் பொருள். Stella வைப் பார்க்கவே முடியவில்லை. அளவில்லா ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தாள். அவளோடு வேலைசெய்யும் எம் நால்வரையும் ஓடி, ஓடி கட்டியணைத்து நன்றிகள் பல உதிர்த்தாள் அவள் படும் ஆனந்தத்தையும் குதூகலத்தையும் என்றால் நம்ப முடியாமல் இருந்தது. எனக்கு ஏதோ போலிருந்தது.

சொற்ப நேரத்தில் எல்லா வைபவங்களும் முடிவடைந்தது. தளபாடங்கள் வழமை போல் அந்தந்த இடங்களில் அடுக்கி விட்டு வழமைக்குத் திரும்பினோம்.

"Tove" என்ற படியே அவள் அருகில் சென்று "gave" காசு எவ்வளவு நான் தரவேணும் என்று அவளை வினவினேன்". அதற்கு அவள் சிறிது யோசித்த வண்ணம் எல்லாமாகச் சேர்த்து இருபத்திரண்டு குறோன்..... நாங்க நாலு பேர்.. அப்போ நீ ஆறு குறோன் தந்தால் போதுமானது" என்றாள். எனக்கோ உள்ளுக்குள் ஒரே சிரிப்பு, குதூகலம். எனது பங்கை அவளிடம் செலுத்தி விட்டு தனியே ஓர் இடத்தில் போய் அமர்ந்து கொண்டேன்.

எங்களைப் பொறுத்தவரையில் டென்மார்க் வந்த ஆரம்ப காலங்களில் ஒரு வைபவத்துக்கு குறைந்தது ஐம்பது குறோன் பெறுமதியான பொருட்களைக் கொடுப்பது மிகவும் சாதாரணமாகவே இருந்தது. ஆனால் இப்போது ஐம்பது நூறாகி நூறு இரண்டு மூன்று மடங்காகிக் கொண்டு போகின்றது. இந்தப் பெருக்கம் இனிமேல் எங்கு போய் முடியப் போகின்றதோ அதுவும் எனக்குத் தெரியாது.

பிறந்த நாள் வைபவங்கள் திருமணக் கொண்டாட்டங்கள் சாமத்தியச் சடங்குகள், துடக்குக் கழிப்புக்கள் இன்னும் எத்தனை எத்தனையோ வைபவங்கள்..

ஒருவர்:- என்னண்ணே! உந்தக் காரை
வித்துப் போட்டு கொஞ்சக்
காசு போட்டுச் சயிக்கிள்
ஒன்று எடுக்கலாம் தானே?



மற்றவர்:- ..........?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காப்புகள், சங்கிலிகள், மோதிரங்கள், குக்கர்கள், கிறைண்டர்கள், கோப்பி மெசின்கள், மணிக்கூடுகள், ...... இன்னும் எந்தெந்தனயோ விலையுயர்ந்த, பெறுமதிமிக்க பொருட்க்கள் என் மனதில் வரிசை வரிசையாய் வலம் வந்து போனது. ஏன்? இவர்களைப் போல் இந்த விடயங்களிலாவது நினைக்கக் கூடாது.

குறைந்த விலையிலான ஒரு பரிசுத் தொகையை வழங்கிக் கொடுக்கவும் மனமில்லை. குறைந்த விலையிலான ஒரு பரிசுத்தொகையைப் பெற்றுக் கொள்ளவும் மனமில்லை.... ஏன்...?

ஏன் தான் நாம் இப்படியெல்லாம் நினைக்கின்றோம், வாழுகின்றோம். நினைத்துப் பார்க்கின்றேன் எனக்கு கொஞ்சம் கூடப் புரியாமல் இருக்கின்றது. நாம் டென்மார்க் போன்ற நல்ல பொருளாதார அமைப்பில் வாழ்ந்தாலும் நமக்கென இருக்கும் சில பிரத்தியேகக் குணங்கள், மன இயல்புகள் மாறுபடவே மாட்டாதா? என நினைத்த வண்ணம் அன்றைய எனது வேலைமுடிவடைந்தது.

- முற்றும் -

- முரளி -

"பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என்று பொதுவாகத் திருமணத் தம்பதியினரைப் பெரியோர்கள் வாழ்த்துவதுண்டு. ஆனால் பெரும்பாலோர் பதினாறு [illegible]களைப் பெறவா? வாழ்த்துகின்றார்கள் என்று அறியாதவர்கள் நினைப்பதுண்டு.

அந்தப் பதினாறு பெரு பேறுகள் யாவை?

1. புகழ் 2. கல்வி,
3. வலிமை 4. வெற்றி.
5. நன்மக்கள் 6. பொன்
7. நெல் 8. நல்லூழ்
9. நுகர்ச்சி 10. அறிவு.
11. அழகு 12. பெருமை
13. இனிமை 14. துணிவு.
15. நோயின்மை 16. வாழ்நாள்.

ஆதாரம்:- பெண்களுக்கு 100 குறிப்பு

## புற்று நோய்

புற்றுநோய் வராமல் தடுக்க ஐதராபாத் மூலிகை மருத்துவர்கள் ஒரு புதிய மருந்தைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இமயமலைக் காடுகளில் "போடாபிலம்" என்ற அபூர்வ மூலிகை விளைகிறது. இதிலிருந்து தடுப்பு மருந்து செய்து புற்றுநோய் வராமல் தடுக்கின்றார்கள். இந்த மருந்துக்குப் பெயர் "ஈ-டோ போஸிட்" என்பது. ஐதராபாத் ஆராய்ச்சி மருத்துவ நிலையம் இத்தகைய மூலிகை மருந்துகளைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# HWA RANG DO
## HOLSTEBRO TAEKWON-DO KLUB
### SELVFORSVAR - KAMPSPORT
Medlem af: H.I.F. - D.T.F. - D.I.F. - E.T.U. - W.T.F.

TAEKWON-DO I HOLSTEBRO

Første tak til K. Milton Eros Kumara for opfordringen til at skrive i "Tamil-bladet". Vi har en del tamilske medlemmer i Holstebro Taekwon-Do Klub, hvilket vi er meget glade for da de alle er meget høflige og træner koncentreret, hvorved de viser den rette Taekwon-Do ånd.

Jeg vil prøve at fortælle lidt om sporten. Taekwon-Do er en Ca. 2000 år gammel kampkunst der stammer fra Korea, hvor det stadig er nationalsporten. Taekwon-Do kom til Danmark i 1968, og Holstebro-klubben blev grundlagt i 1975. Klubben har idag Ca. 110 medlemmer og egne lokaler i Danmarksgade 8 (ved siden af kulturhuset). Taekwon-Do kan dyrkes som konkurrenceidræt, motionsidræt og selvforsvar ikke mindst det sidste kan have betydning for de tamilske flygtninge, der desværre ikke altid behandles lige pænt af danskerne. Taekwon-Do er fortræffelig som motion, idet man opøver en betydelig kropskontrol, selvsikkerhed og træner alle dele af kroppen.

Kampsystemet er bygget op af spark, slag, blokeringer og undvigeteknikker, det hele læres fra bunden af, og kan kombineres i en uendelighed.


I Hwa Rang Do - Holstebro Taekwon-Do Klub gør vi en del ud af at holde de koreanske traditioner ved lige, og kører bl.a en ret stram disciplin under træningen. Da det er en fuld kontakt - sport er disciplin simpelthen nødvendig af hensyn til sikkerheden. Samtidig viser man respekt for sin instruktør og træningspartnere. Endelig er det med til at styrke den enkeltes koncentration og selvdisciplin.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Hvad koster det at træne? Man betaler et mindre beløb ved hver graduering hvor man efter bestået prøve erhverver sig et nyt bælte som tegn på større kunnen. Man kommer til graduering når træneren vurderer at man er i stand til det der skal dog gå mindst 3 mdr. mellem hver gang.



En meget svær Taekwon-Do detalje - splitsparket.

I Holstebro trænes der 2 aftner om ugen med instruktør + mulighed for fri træning hver lørdag - her for betales et kontingent på 210 kr i kvartalet for voksne + 120kr. pr. år til Dansk Taekwon-Do Forbund. En Taekwon-Do dragt (en dobog) koster 300-400 kr. alt efter størrelse, og kan bøbes gennem klubben. I starten er det ikke påskrævet med en dragt, man kan fint klare sig med f.eks en joggingdragt.

Hvem kan træne? - alle uanset alder og køn. (Børnehold 10 -15 år starter først til August 1990,se avisen). Jeg håber at vi også i fremtiden vil se mange tamilske medlemmer i Holstebro Taekwon-Do Klub idrætslige aktiviteter er jo også en vigtig del af at blive integreret i det danske samfund. Som sagt kan Taekwon-Do dyrkes af både mænd og kvinder, og vi har



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

faktisk mange danske kvinder på alle vore hold - Jeg håber inderligt at også de tamilske kvinder og unge piger vil starte på Taekwon-Do på lige fod med deres danske medsøstre.

Taekwon-Do kan ikke beskrives med ord, man skal prøve det på sin egen krop for at få en fornemmelse af hvad det er. Der er endne ganske få ledige pladser på nybegynderholdet, der træner Mandag og Onsdag Kl. $19^{00}$-$20^{30}$. De øvede træner Mandag og onsdag samme tid. Du er altid velkommen til at kigge op til os få en snak, se på eller bedst af alt selv være med! Yderligere oplysning på tlf 97413776.

Poul-Mejner Jensen

# தேவ பாலனே!

தேவ பாலனே!
ஞால தேவனே!!
அதிகாலை வேளையில் - வெண்
மதி போல்த் தோன்றினாய்...

அந்த கோனின் ஆட்சியில்
மண்டு செய்கள் - மத்தியில்
தாய் மேரி வயிற்றிலே
புதுமலராய்(த்) தோன்றினாய்...

வல்ல அரச ஆட்சியில்
செய்ப் பிணக்குவியல்கள். மத்தியில்
ஏழை மக்கள் வாழ்வே
ஞால ஒளியே தோன்றினாய்...
இன்று.....
எம் வாழ்வு நெகிழுது,
அரச ஆட்சி பிழுது,
குழந்தை, குட்டிகள் - மாழுது
இக்கவலை தீரவே - நீவிர்
மீண்டும் பிறப்பீரா!!

[illegible]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பெற்றோர்களின் கவனத்திற்கு!

அகதிகள்; வெளிநாட்டவர்களின் குழந்தைகள் நலன் கருதி 1989 டிசம்பர் 5ம் நாள் ஆரம்பக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாத முதல் செவ்வாய்க் கிழமைகளில் இக்கூட்டம் தொடர்ச்சியாக நடைபெறும்.

குழந்தைகளின் சுகாதார நலன் கொண்டே இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இடம்: கலாச்சார இல்லம், டன்மார்க்ஸ்கேதே-10

காலம்: 5.12.89. நே.ப: 10-12

குழந்தைகளின் வளர்ச்சி, சுகயீனம், கல்வி விளையாட்டு, உணவு மற்றும் வேறு பல விடயங்களும் அடங்கும்.

இதனை உங்
களுக்குத் தெரி
யப்படுத்துவ
ச் சந்தி
பெருமிதம்
கொள்
கிற
து



⊛ 25-11-1989. சனிக்கிழமை கொல ... ஸ்ரப்ரோ தமிழ்-டனிஷ் நட்பு ... றவுச்சங்கத்தினால் டென்மார்க்வாழ் தமிழர்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று வெற்றிகரமாக நடாத்தியிருந்தது. அந்தப் போட்டியின் நான்கு பேர் கொண்ட விளையாட்டில் 1வது இடத்தை FREDERIKSHAVN விளையாட்டுக் கழகமும், 2வது இடத்தை STRUER விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டது.

SETUP-புதியமுறை ஆட்டத்தில் HOLSTEBRO விளையாட்டுக் கழகம் 1வது இடத் ... தையும், 2வது இடத்தை FREDERIK ... HAVN விளையாட்டுக் ... கழகமும் பெற் ... றுக் கொண் ... டன ... வெ ... ற்றி பெற்ற கழகங்களையும், இப் போட்டியில் பங்காற்றிய சகல கழகங்களையும், ஆதரவு நல்கியோரையும், 'சந்தி' மனமார வாழ்த்துகிறது.

## அன்பான தமிழ் மக்களுக்கு!

டென்மார்க்கில் "ஹூலண்ட் தமிழ் இசைக்குழு" பல தரமான கலைஞர்களைக் கொண்டு நல்ல இசை விருந்து அளித்து வருகின்றனர்.

நீங்களும் உங்கள் இடங்களில் நடைபெறும் கலை, கலாச்சார விழாக்களுக்கு நல்ல தமிழிசை விருந்தளிக்க விரும்புகிறீர்களா? நாடுங்கள் "ஹூலண்ட் தமிழிசைக்குழு". தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

V.S. RAGAVAN
ODINS GADE 26ST
7400 HERNING.

www.tamilarangam.net




# சிறார்களின் சிந்தனைக்கு.

1. பிரவிடா [Pravda] என்பதன் அர்த்தம் என்ன?
2. கராட்டே என்பதன் அர்த்தம் என்ன?
3. ஐந்து ஒலிம்பிக் நிறங்களையும் பாவித்து என்னத்தை அமைக்கலாம்.
4. வொல்வோ என்பதன் அர்த்தம் என்ன?
5. சனிக்கிரகத்தின் சுற்றியுள்ள வளையத்தினைக் கண்டுபிடித்தவர் யார்?

(தொடர்ச்சி 31 பக்கம்)


VED DU DET?....

1. Hvad betyder Pravda?
2. Hvad betyder Karate?
3. Hvad kan man denne med de fem Olympiske farver?
4. Hvad betyder Volvo?
5. Hvem opdagede Saturns ringe?
6. Hvad er Europas bjergrigeste land?
7. Hvilken stjerne ligger nærmest Jorden?
8. Hvilket land vandt Ol-guld i fodbold i 1960?
9. Hvilken farve har kremls mure?
10. Hvilken ugedag falder 1. January 2001 på?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உணவின் மகிமை

சிறுவர்களுக்காக
- ரகு- கொல்ஸ்ரப்புரே-

இந்தியாவில் வங்கநாடு என அழைக்கப்படும் இடத்தை காண்டீபன் என்ற ஒரு அரசன் ஆண்டு வந்தான். சரியான முறையில் ஆட்சி செலுத்தப்படாததால் அவ்வூர் மக்கள் வறுமையில் வாழ்னர். அவன் மதுவுக்கும் மங்கைக்கும் அடிமைப்பட்டிருந்ததால் பணத்தை வீண் விரையம் செய்து வந்தான். அவ்வூரில் சிலர் பெரும்பணக்காரர்களாகவும் பலபேர் ஏழைகளாகவும் காணப்பட்டனர். பெரும் பணக்காரர்கள் ஏழைகளுக்கு வட்டிக்கு பொருட்களைப் பணயமாக வைத்து பணம் கொடுத்துச் சம்பாதித்து வந்தனர். நாளடைவில் ஏழைகள் சாப்பிட வழியின்றி தவித்தனர்.

பசியினால் குழந்தைகள் அழுதழுது இறந்தனர். தாய்மார்கள் ஜேசுபிரானிடம் முறையிட்டழுதனர். அரசன் கூட தன் செயலைக்கண்டு வெட்கப்பட்டு உணர்ந்து ஜேசுபிரானிடம் அழுது வேண்டினான். நீர் தான் மக்களையும் நாட்டையும் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டி நின்றான். அரசனின் இயலா நிலையை உணர்ந்த ஜேசுபிரான் அன்றிரவு எல்லோரினதும் கனவில்த் தோன்றி இன்றிலிருந்து உங்கள் எல்லோருக்கும் தானகவே வயிற்றில் உணவு பரிமாறப்படும் என்று கூறி மறைந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விடியற்காலையில் எல்லோருக்கும் உணவு இருப்பதனால் சந்தோசமாக ஆரவாரம் செய்தனர். நாழிகைகள் பல கழிந்தது. வேலைகள் செய்யத் தேவையில்லாததால் மக்களில் பலர் தொடர்ந்து தூங்கினர். பலபேர் வட்டிக்குக் கொடுத்த ஆசாமிகள் மீது கோபப்பட்டு அடித்துக் கொண்டனர். சில ஆண்கள் பெண்கள் மீது பலாத்காரம் புரிந்தனர். ஒருவனுக்கு ஒருத்தி என்ற காலம் போய் மனைவிமார் பலர் பல ஆண்களோடும் தொடர்பு கொண்டனர். இதைக் கண்ணுற்ற பல கணவன்மார் சண்டையிட்டனர். இவைகளைத் தீர்க்க முயன்ற அரசனும் கொல்லப்பட்டான். நாடு முழுவதும் பஞ்சமாபாதகங்கள் தலைவிரித்தாடின.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஜேசு பிரான் அவ்வூரில் தோன்றி எல்லோருக்கும் உயிர் கொடுத்து புதுவாழ்க்கையை ஊக்குவித்தார். "சுயமாகவே தொழில் செய்து வேண்டும், மற்றவர்களுடைய கைகளில் தங்கியிருக்கக் கூடாது" எனப் புத்திமதி கூறினார்.

பெரும் பணம் படைத்தவர்கள் ஜேசு பிரானின் காலில் வீழ்ந்து வணங்கி ஏழைகளுடன் நம் பணத்தைப் பகிர்ந்து கொண்டு எல்லோரும் சமமாக தொழில் செய்து வாழ்வோம் இனிமேலும் "யாரிடமும் பசி என்று கேட்கமாட்டோம்" என்றனர். "அரசன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே" என்ற பழமொழியைக் குறிப்பிட்டு "காண்பீபா உன்னுடைய ஆட்சியில் இனியொரு களங்கம் இல்லாது, மக்களின் பசி பட்டினியைப் போக்க நீர் தான் நல்ல திட்டங்கள் வகுத்துச் செயற்பட வேண்டும். கடவுளாகிய நான் உங்கள் பசியைத் தீர்த்து வைத்தேன். அதனால் ஏற்பட்ட கதியை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். இனிமேலாவது உங்கள் சுய புத்தியைக் கொண்டு தொழில் செய்து சாப்பிட முயற்சியுங்கள் என்று கூறி மறைந்தார். அதன் பிறகு அவ்வூர் மக்கள் சீரும் சிறப்புடனும் பசி என்றால் என்னவென்று தெரியாமலும், தொழில் விருத்தியில் நன்கு சிறப்புற்று அயலூர்களும் வியக்கத்தக்க வகையில் வங்கவூர் மிகவும் சிறப்புற்று விளங்கியது.

- முற்றும் -

# வாழ்த்துகிறோம்

"GRINDSTED YOUNG STARS" விளையாட்டுக் கழகத்தினர் டென்மார்க்கில் இருக்கும் தமிழ் உதைபந்தாட்டக் கழகங்களுக்கு "தமிழர் உதைபந்தாட்டப் பொதுச்சபை" என்று ஓர் அமைப்பை உருவாக்கும் நல்லெண்ண நோக்கம் கொண்டு வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கின்றார்கள்.

இப்படியான ஒரு பொதுச் சபையை உருவாக்கி அந்தச் சபையின் சட்டதிட்டங்களுக்குக் கீழ் நமது நாட்டில் நடைபெறுவது போல் ஒரு பெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியையோ, அல்லது டென்மார்க்கில் நடைபெறுவது போன்று, புள்ளிகள் அடிப்படையிலான சுற்றுப் போட்டிகளையோ நடாத்த வேண்டும், என்பது இந்த விளையாட்டுக் கழகத்தினரது நல்லெண்ணமாகும்.

"GRINDSTED YOUNG STARS" விளையாட்டுக் கழகத்தினருக்கு சஞ்சீவியின் சார்பில் வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்.


இது சம்பந்தமாக ஏதாவது தகவல்கள் அறிய விரும்பினால் கீழ்க்காணும் முகவரியோடு தொடர்பு கொள்ளவும்.

T. SHANKAR.
TINGPARKKEN-38-2TH
7200-GRINDSTED.
TF:-75310339

SE. MAHENDIRAN
STARUPVEJ-4
6823. ANSAGER.
TF:-75297775

www.tamilarangam.net

# எக்ஸ் கதிர்




F. டங்ஸ்டன் கம்பி இழை. T. உலோக இலக்கு.
C. உலோகக் கிண்ணம். A. தகடுகள்.

தமிழாக்கம் - திரு. தில்லைநாதன்

## கூலிட் குழாய்.

1913ம் ஆண்டில் கூலிட் என்பவர் வாயுக்குழாயின் முக்கிய குறைபாடுகள் நீக்கி இக்குழாயை அமைத்தார். இது ஒரு வெப்ப மின் குழாயாகும். குழாயின் ஒரு புறம் டங்கஸ்டன் கம்பி இழை பொருத்தப்பட்டிருக்கின்றது. இதுவே எதிர் மின் வாயுவாகவும் அமைந்துள்ளது. இக்கம்பியிழை குறை மின்னழுத்த மின்கல அடுக்கில் எரி ஒளிர்வு நிலைக்குத் தருபடுத்தப்படுகின்றது. எனவே அது வெப்ப அயனிகளை விடுவிக்கின்றது. கம்பி இழை ஓர் உலோகக் கிண்ணத்தினுள் வைக்கப்பட்டுள்ளது. இதனால் விடுவிக்கப்படும் மின்னணுக்கள் ஒரு புள்ளியில் குவியப் பெறும் டங்ஸ்டனிலான உலோக இலக்கு T குழாயின் மறுபுறம் ஒரு செப்புக் கம்பியுடன் இணைக்கப்பட்டுக் குழாயினுள் பொருத்தப்பட்டிருக்கின்றது. இதுவே நேர் மின் வாய். குழாய்க்கு வெளியே செப்புக் கம்பியின் மீது இணைக்கப்பட்டுள்ள "A" என்ற தகடுகள் வெப்பத்தை எளிதில் கடத்த பயன்படுத்தப்படுகின்றது. வலிமை மிக்க எக்ஸ் கதிர் குழாய்களில் டங்ஸ்டன் தகட்டில் உண்டாகும் வெப்பத்தை எளிதில் வெளியேற்றுவதற்குக் குழாயைச் சுற்றித் தண்ணீரைப் பாயச் செய்து குளிரச் செய்யமுடியும்.

தூண்டுச் சுருளின் நேர்முனையுடன் செப்புக் கம்பி இணைக்கப்பட்டிருக்கின்றது. சுடு கம்பியிழை தூண்டுச் சுருளின் எதிர்முனையுடன் பொருத்தப்படுகின்றது. சுடு கம்பியிலிருந்து உமிழும் வெப்ப அயனிகள் அதிக மின்னழுத்த வேறுபாட்டால் உலோக இலக்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோக்கி முடுக்கப்படுகின்றது. மின்னணுக்கள் திடீரெனத் தடுத்து நிறுத்தப்படுவதால் அவற்றின் இயக்க ஆற்றல் எக்ஸ் கதிர்களாக தோன்றுகின்றன.

உலோக தகட்டைத் தாக்கும் பொழுது அவற்றின் சக்தியில் 99.8 சதவீதம் வெப்பமாக மாற்றப்படுகின்றது. எனவே அக்குழாய் ஒளி வீசுகின்றது. மிகுதியாகவுள்ள 2 சதவீதம் கண்ணிற்குப் புலப்படாத எக்ஸ் கதிர்களாக வெளியிடப்படுகின்றன. மின் அணுக்களின் சக்தியின் அதிகபாகத்தை வெப்பமாக வெளியிடச் செய்ய வேண்டும். இதற்கு நேர்மின் வாய் மிகச் சிறந்ததாகும்.

ஒரு நிமிடத்திற்கு 3000 ஆயிரம் முறை சுழலும் இம்மின் வாய் தன் மேற்பரப்பை மிகச்சிறிது நேரத்திற்கே மின்னணுத் தாக்குதல்களுக்கு உட்படுத்துகின்றது. சக்தியின் பெரும்பாகம் எக்ஸ் கதிர்களாக மாற்றப்படுகின்றது. நேர்மின் வாய் சிறிதாக இருந்தால் கதிர்களால் ஏற்படும் படிமம் மிகக்கூர்மையாக இருக்கும், எனத் தெரிய வந்தது. ஆகவே சுழலும் நேர்மின் வாயின் பயன் இன்றும் அதிகமாகின்றது.

கூலிட் குழாயில் எக்ஸ் கதிர்களின் பண்பையும் செறிவையும் எளிதில் மாற்றலாம். சுருக்கம்பியின் மூலம் செல்லும் மின்னோட்டத்தின் அளவை அதிகரித்தால் அதிகமான மின்னணுக்கள் அதிலிருந்து வெளிவரும். இதனால் உண்டாகும் எக்ஸ் கதிர்களின் ஆற்றல் அதிகரிக்கின்றது, அலைகளின் செறிவு அதிகமாகும். எக்ஸ் கதிர்களின் பண்பு குழாயிற்குக் கொடுக்கக் கூடிய மின்னழுத்தத்தைப் பொறுத்திருக்கின்றது. அதிக அளவு மின்னழுத்தத்தைப் பிரயோகித்தால் ஊடுருவும் திறன் அதிகமான கூடிய எக்ஸ் கதிர்கள் உண்டாகின்றன. இவை கடினமான பொருட்களின் மூலம் எளிதில் ஊடுருவிச் செல்லும். குழாயின் மீது செலுத்தும் மின்னழுத்தம் குறைவாக இருந்தால் மென் எக்ஸ் கதிர்கள் உண்டாகின்றன. இவை ஊடுருவும் திறன் குறைந்தனவாய் இருக்கின்றன. இலேசான பொருட்களின் மூலமும் மெல்லிய தகடுகளின் மூலமுமே இவை ஊடுருவிச் செல்ல முடியும். எக்ஸ் கதிர்களால் பாதிக்கப்படாதவாறு குழாய் காரியக் கவசத்தால் மூடப்பட்டிருக்கும், ஏனெனில் எக்ஸ் கதிர்கள் காரியத்தின் மூலம் ஊடுருவிச் செல்லமாட்டா


---

ஆதாரபூர்வமான பொய்களைக் கூற இந்த உலகில் கவிஞர்களுக்கு மட்டுமே சிறந்த உரிமை வழங்கப்பட்டுள்ளது.

– சேர். ஜான் ஹாரிங்டன்.

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்-போட்டி: 5



"சஞ்சீவி" உங்களுக்காக வழங்கும் குறுக்கெழுத்துப்போட்டி இல: 5 க்கு அனைவரையும் அன்புடன் அழைக்கிறது.

சஞ்சீவிக்காக நீங்கள் செய்ய வேண்டியது: குறுக்கெழுத்து - வெற்றுக் கட்டங்களில் தரப்பட்டுள்ள கேள்விகளுக்கான பதிலை தெரிவு செய்து பூர்த்தி செய்யவேண்டியதே:

**கேள்விகள்: இட - வலம்:**

3.16: சேவரின் தொந்தரத்தை இப்படியும் அழைப்பர். குழம்பி

23.4: "Antony" என்ற ஸ்பானிய பெயர் தமிழில் இப்படி - அழைக்கப்படுகிறது.

48.5: "Julemand" என இங்கு அழைக்கப்படுபவர் எமது நாட்டில் இப்படி அழைக்கப்படுகிறார்.

36.49: "இறைவன்"க்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.

15.38: பிள்ளையாரை இப்படியும் அழைப்பர்.

37.50: எமது நாட்டுச் சந்தைகளில் பொருட் கொள்வனவு செய்வோர் "—" பேசியே விலை தீர்ப்பர். - இது குழம்பியுள்ளது.

6.8: அரசுகள் இதனை வகுப்பதன் மூலமே நாட்டை வழிப்படுத்துகின்றன.

21.32: அரங்குகளில் மட்டுமல்ல கடலிலும் இது உண்டு.

7.44: "இயேசு நாதர்" பிறந்த இந்த காலத்தை "—" என அழைப்பர்.

47.46: தமிழ் உயிர் மெய் எழுத்துக்களில் "க. ங" வுக்கு அடுத்து வரும் இரு எழுத்துகளே இவை

**கேள்விகள்: மேல் - கீழ்:**

7.2: ஒன்பது வகைத் தானியங்களை இப்படி அழைப்பர்.

7.11: விலையுயர்ந்த தோல் ஆடைகள் பெறுவதற்காகமட்டுமே இந்த மிருகத்தைக் கொன்று. இதை எடுப்பர்.

18.14: மனம் உடைந்தவர்களுக்கு மனச்சாந்திபோல "நா" வரண்டவர்களுக்கு இந்த "சாந்தி" அவசியம். இது குழம்பியுள்ளது

26.25: மூடைகளில் பெரிய மூடை "—" மூடையே.

28.27: கணவன்மீது இந்தப்பக்தி உள்ள மனைவியரை "—" பக்தி உள்ளவர் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 4 ற்கான போட்டியாளர் கருத்துக்கள்!

சஞ்சீவி ஆசிரியர்களுக்கு எமது மனமார்ந்த கிறிஸ்மஸ் வாழ்த்துகள் கு.எ. போட்டி வடிவங்கள் அழகையூட்டுகின்றன.

எவ். இரகுநாதன்: Holstebro.

புதுமைகள் வரவேற்கத்தக்கது. ஆனால் கைகளைக் கோணலாக்கி அல்லது புத்தகத்தைக் கோணலாக்கி எழுதவேண்டும். அவ்வளவு தான்.

கே. கண்ணன்: Holstebro.

இது நல்லதாக அமைந்துள்ளது. ஆனாலும் இலக்கங்கள் தெளிவான முறையில் அமைந்தால் நன்றாக இருக்கும்.

ஆர். செல்வி: TVIS

வரவேற்கத்தக்கதும், அனைவராலும் விரும்பப்படுவதுமாகும்.

எஸ். சந்திரகுமார்: Horsens.

டென்மார்க் வாழ் தமிழ்ச் சிறார்களுக்கு பொழுது போக்காகவும், எமது தாய் மொழியைத் திரும்பவும் படிக்கக் கூடிய ஆவல் ஏற்படுகிறது.

எம். சந்திரசேகரம்: Strueq.

இம் முறை கு.எ. போட்டி இல: 4ன் வடிவம் நன்றாக அமைந்துள்ளது ஆனால் கட்டங்களின் இலக்கங்கள் தெளிவாக இல்லை. கரும்புள்ளியாக இருக்கின்றன. இனிவரும் போட்டியில் கட்ட இலக்கங்கள் தெளிவாக இருக்குமென எதிர்பார்க்கிறோம்.

பீ. ஷாமினி: Hjerm.

கணனி என்னும் சொல் இது கணக்குப் பார்ப்பதற்கு உதவும் கருவியாகும். இங்கு குறிப்பிடப்படவில்லை. முறைகள் ஒன்றுமின்றும் வடிவங்களை மாற்றியமைத்தமை அழகையூட்டுகிறது.

கே. இந்திரதாஸன்: Holstebro

புதிய முறையில் வருவதால், சில சிரமங்கள் இருந்தாலும் வரவேற்கக்கூடியதாகவுள்ளது.

என். நாகேந்திரம்: Holstebro.

இப் புதிய வடிவம் எங்களுக்கு புதிய பாதையை ஏற்படுத்தியுள்ளது. மேலும் புதிய வடிவங்கள் பலருடைய மனங்களைக் கவரலாம். புதிய வடிவத்தில் குறைகளை ஆவன செய்யவேண்டும். சஞ்சீவிக்கு புதிய காதல் ஜோடிகள் குடைபிடிப்பதுபோல் அமைந்துள்ளது. எத்தனை புதிய எழுத்துக்களை எழுதினாலும், எமது தாயெழுத்திற்கிணையாகுமா!

சி. தயாளன். Holstebro.

போட்டியாளர்களுக்கு எமது நத்தார் நல்வாழ்த்துகள். உங்கள் கருத்துகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். மேலும் கருத்துகள் வரவேற்கப்படுகின்றன.

(கு.எ. போட்டி ஆசிரியர்)

www.tamilarangam.net

## கவனியுங்கள்

குறுக்கெழுத்துப்போட்டி சம்பந்தமான விபரங்களும், விமர்சனங்களும்:

1. சஞ்சிகையின் வெளியீட்டு உறுப்பினர்கள் தவிர்ந்த யாவரும் பங்குகொள்ளலாம்.
2. போட்டியில் பங்குகொள்வோர் கட்டங்கள் அனைத்தையும், அத்துடன் சரியான முதலாவதையும் தெளிவாக எழுதி இதழின் இறுதிப் பகுதியிலுள்ள கட்ட அட்சரம் பத்திரத்தை பூர்த்தி செய்து 16.11.89. முன் சஞ்சிகைக்கு அனுப்பிவைத்தல், (முகவரி குறுக்கெழுத்து அட்சரம் பத்திரத்தில் உள்ளது)
3. வாசகர்கள் யாவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம், ஆனால் இதழின் அசல் பிரதியே ஏற்றுக்கொள்ளப்படும்.
4. போட்டி முடிவுகள் பத்திரிகைக் குழு நடுவரால் தெரிவு செய்யப்படும்.
5. கேள்விகளுக்கு விடைகளுக்கமையவும், சரியாகவும், தெளிவாகவும், பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கட்டங்கள் குலுக்கல் மூலம் 1ம், 2ம், 3ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறும்.
6. போட்டி சம்பந்தமான நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
7. சரியான விடையும், பரிசு பெற்றோர் விபரங்களும், அடுத்த இதழில் வெளியிடப்படும்.
8. பரிசுகள் உரியவர்களுக்கு காலக் கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

னன்றழைப்பர்.

33.31: இலங்கையின் தேசிய மலர் இதுவாகும். இது குழம்பல்.


35.38: "அம்பு" ஓர் சங்க இலக்கியங்கள் இப்படி அழைக்கும். குழம்பல்

40-: மலரின் மறுபெயர் இது.

42.46: காலஞ்சென்ற தமிழகமுதல்வர் அவர் அன்றுத்துறையின் புகழ் பெயர் இதுவாகும்.

46.51: டென்மார்க்கின் பிரபலமான பாடகனின் பெயர் இது. குழம்பியுள்ளது.

## குறுக்கெழுத்துப் போட்டி: 4



### குறுக்கெழுத்துப்போட்டி இல: 4ன்

சரியான விடைகளும். பரிசிற்குரியோரின் பெயர், விபரங்களும்.

**இட - வலம்:**

1.14: மதம்.
3.50: கம்பராமாயணம்.
4.17: தளம்.
5.18: மாதம்.
7.46: மகாசபை
15.28: குழவி.
21.34: கனனி.
31.48: பெற்றோல்
27.52: கொத்மலை.
56.49: காலம்.
41.51: கேடு.

**மே - கீழ்:**

1.5: மரகதம்.
7.11: மத்தளம்.
18.14: மாம்பழம்.
20.21: காணி.
24.26: ராகு.
29.27: மாவிலை.
32.31: சனல்.
40.44: மனோகரா.
46.-: —
48.52: பெத்லகேம்

1வது: **Kala**,
Egelund 73,
4000 Roskilde.

2வது: **S. Nagendram**,
Åglimt 11
7500 Holstebro.

3வது: **M. Santhirasegaram**,
Grønnedal - 66.1 T.U
7600 - Struer.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களுக்கும், இப்போட்டியில் கலந்து கொண்டோருக்கும் எமது நல்வாழ்த்துகள். அத்துடன் கிறிஸ்மஸ் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பரிசுகள் பெற்றோருக்கான பரிசுக்கட்டளைகள் காலக்கிரமத்தில் சஞ்சிகையால் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

## சென்ற இதழில் வெளியான "சிந்தனைக்கு விருந்து" என்ற கேள்விக்குச் சரியான பதில்.

அனைத்திலும் 20 கிராம் நாணயங்கள் இருந்தால்,

1வது வரிசையில் 1 நாணயம்
2 " 2 "
3 " 3 "
4 " 4 "
5 " 5 " என எடுத்து நிறுக்கும் போது அதன் எடை (1+2+3+4+5)x20 = 300 கிராமாக இருக்கும்.

ஏதோ ஒரு வரிசையில் 18 கிராம் நாணயம் உள்ளபோது:

1வது வரிசையில் அது இருப்பின் மொத்தநிறை 300-2 = 298 கி

2வது வரிசையில் அது இருப்பின் மொத்த நிறை 300-2x2=296

3வது வரிசையில் அது இருப்பின் மொத்த நிறை 300-2x3=294

4வது வரிசையில் அது இருப்பின் மொத்த நிறை 300-2x4=292

5வது வரிசையில் அது இருப்பின் மொத்த நிறை 300-2x5=290

ஆக இருக்கும். இதிலிருந்து எந்தவரிசையில் உள்ளது என அறிந்து கொள்ளலாம்.

சரியான விடையை அளித்த அதிஷ்டசாலியின் பெயர், முகவரி

T-Kala.
4000-ROSKILDE.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருந்திரோ!

வருவோர்க் கெல்லாம்
விருந்தளித்து
வாய் ததும்ப
வெறுமையிலே - செத்தசைத்து
பேர்தரமையால்,
பொருக்கி - வைத்த
உணர் வம்பதனை
உளமுருகி (ச்)
சுவைத்து விட்டு - ஏனோர்
சூடேறி,
தூங்கி நிற்கும் - பழைய
தமிழினமே! நீவிர்
திருந்திரோ!!
இனியும்.

ஜெனா
Holstebro.

---

இதழ்: 4 ற்கான "சிறுவர் அரங்கம்" பகுதியின், பத்துக் கேள்விகளுக்கான விடைகள்:

1. அமேசன்: வட அமெரிக்கா.
2. சனிக்கிரகம்
3. அந்தீஸ்: வட அமெரிக்கா
   இமயமலை: நேபாள் + இந்தியா
4. நைல் நதி: எகிப்து
5. இன்கா: மாயா
6. டென்மார்க்: நோர்வே
   ஸ்வீடன்: பின்லண்ட் (4)
7. புதன் கிரகம்
8. ரனஸ்
9. வட அத்லாந்திக் சமாதானக்-கூட்டமைப்பு.
10. வியாழன்.


Amesan . N: America.
Saturn
Anthis : N. America.
Everest : Nebal + India.
Nile : Ahift.
Inga : maya.
4. : Danmark: Norway
Sweedan : Finland.
. Merkur
Randes.
North Atlantic Treaty Organ-
ization.
Jupite



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# DEN BEDRØVEDE MAND



Den bedrøvede mand er en autentisk oplevelse som en 12 prig dreng var ude for i 1972.

Da Ole som "jeg tillader mig at kalde drengen" var omkring 10 år fik hans for et job som kirkebetjent og graver.

Ole begyndte straks at gå sin far til hånde hvor han kunne og det varede ikke længe inden han følte sig hjemme på kirkegården.

Ole voksede sådan set op på denne kirkegård, men det er en anden historie for her vil vi kun beskæftige os med de første år.

Ole hjalp til med at grave gravene hvilket han fandt fasinerende. Især de mange forskellige menneskerster som de fandt.

Ole kom til at elske denne kirkegård som blev for ham en legeplads, en arbejdsplads, et hjem og ja sågar en slags skole.

Der var en meget speciel grav på denne kirkegård hvor man kunne se ind til kisterne og denne grav tiltrak Ole som en magnet og han kunne tilbringe flere minutter foran denne grav, blot siddende ganske stille og tænke på dem som l år i graven.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Der var også en anden speciel gravsted. Dette gravsted var så tilgroet at det lignede en hel urskov.

En sommerdag i 1972 da Ole legde ved netop denne gravplads skete der noget besynderligt.

Som de fleste i hans alder var Ole fasineret af våben og han havde denne dag medbragt en af sine knive og øvede sig nu i at kaste til måls efter et træ som stod ved den tilgroede grav.

Ole havde kastet med kniv på kirkegården før, men aldrig ved siden af en gravplads og bestemt ikke denne:

Pludselig skete det, midt i et kast.

Ole stivnede. For lige i det han skulle til at kaste kniven fra sig dukkede der noget op foran ham, i hans egen hovedhøjde men i en arms længde fra ham.

Han kunne tydelig se at det var et ansigt og trode at det var nogen som der lavede grin med ham så han så sig omkring og kunne blot konstater at han var mutters allene, og vendte sig derfor imod ansigtet igen som stadig var der.

Det svæede lige foran ham, et ovalt ansigt som tilgørte en mandsperson. Men det havde ingen krop og ingen hår.

Ansigtet var transperant, men man kunne tydeligt, se øjne, næse og mund og de var fortrukken som om den var meget bedrøvet eller ked af et eller andet.

Efter nogle sekunder forsvandt ansigtet og Ole stak kniven i skeden overbevist om at det



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

var sidste gang han legede knivkaster på en kirkegård.

Ole gik, eller nærmest løb ud af kirkegården. Men selvom han beholdt hændelsen for sig selv til han blev voksen fortsatte han dog sin gang på kirkegården.

En af de mange ting som Ole lærte på denne kirkegård var at der sandelig er besynderlige kræfter imellem himmel og jord som vi endu ikke kan fatte og derfor afskriver som fantasi, men Ole ved bedre.

Dette er så slutningen på denne autentiske fortælling, men der er endnu en af Oles oplevelser som der er værd at fortælle . Men jeg er bange for at i må have den tilgode til en anden god gang.

Thorleleif Damtoft
Holstebro.

Hvad laver de i amter og kommuner ?

De 14 amters opgaver er :

Sygehuse, institutioner for handicappede,
gymnasier, HF og voksenuddannelse,
miljøkontrol og busruter ,
og meget andet.

Opgaverne for de 275 kommuner:

Skoler, biblioteker, vuggestuer, børnehaver,
fritidshjem,
ældreområdet med bl.a. pejehjem,
bistandshjælp og sygedagpenge,
veje, vandforsyning, kloaker, rensningsanlæg, miljøkontrol - og meget andet.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீட்பர் வருகிறார்

பலமுறை ஜெபியுங்கள் - எம்
தலைமுறை காக்க
மீட்பர் வருகிறார்.

பாவிகளை இரட்சித்து
பாவங்களை போக்கி
மகிமையுண்டாக்கு வதற்காக
மீட்பர் வருகிறார்.

டிசம்பர் மாத பூந்தென்றலாய்
தேவனின் நற்செய்தி
பாரெங்கும் பரப்ப
மீட்பர் வருகிறார்.

ஆலயமணி ஒலிக்கட்டும்
பட்டாசுகள் வெடிக்கட்டும்
பட்டாடைகள் ஜொலிக்கட்டும்
பரலோக ராஜ்யத்தை எமக்குரித்தாக்க
மீட்பர் வருகிறார்.

இனிமகிழ்ச்சிதான்
பெருமகிழ்ச்சிதான்

தூர்ந்து போன கனவுகளோடும்
மடிந்து போன நினைவுகளோடும்
வாழ்ந்து கொண்டிருக்கும் பாவப்பட்ட மானுடரே கேளீர்
மீட்பர் வருகிறார்.

இனி மகிழ்ச்சிதான்
பெரு மகிழ்ச்சிதான்

பசியும் பட்டினியும்
உலகை சூழ்ந்தாலென்ன...
இரத்த வெறியும், இரத்த ஆறும்....
எங்கும் பெருக் கெடுத்தாலென்ன...
யுத்தங்கள் கழுத்தை நெரித்தாலென்ன....
மானுடன் சுதந்திரம் இன்றி வாழ்ந்தாலென்ன...
மீட்பர் வருகிறார்.

www.tamilarangam.net

கொண்டாடுவோம்
வெறிதாய் கொண்டாடுவோம்.

இனி மகிழ்ச்சி தான்
ஒரு மகிழ்ச்சிதான்

ஒவ்வொரு வருடமும் பிறப்பார்
மகிழ்வோம்
இறப்பார். மூன்று நாள்களுக்குள்
மீண்டும் உயிர்ப்பார்
மகிழ்வோம்
மீண்டும்.... மீண்டும்...
பிறப்பார்.... இறப்பார்... உயிர்ப்பார்...

மீட்பரே
மானுடன் தன் வாழ்வுக்கே
அர்த்தம் காணாத போது
உமது பிறப்பும். இறப்பும் உயிர்ப்பும்
இங்கு வெறிதாய் அர்த்தப்படாது.

அர்த்தங்கள் எல்லாம் அஸ்தமனமானபின்
கடவுளின் வார்த்தைக்கு மட்டும் அர்த்தம் என்ன?

ஆனாலும் என்ன
நாம் அர்த்தமற்றவர்கள்
எதற்குமே அர்த்தம் தேடாதவர்கள்
உமது பிறப்பை கொண்டாடுவோம்
வெறிதாய் கொண்டாடுவோம்

ஆலயமணி ஒலிக்கட்டும்
பறை ஒலிக்கட்டும்

பாவிகளை இரட்சிக்க
மீட்பர் வருகிறார்

இது தேவனின் நற் செய்தி.

உ. திசபாரதி

www.tamilarangam.net

VALGET DEN 21.NOVEMBER

Tirsdag den 21. november var der kommunal-valg i Danmark, og vælgerne skulle afgøre, hvem der skal styre 275 kommuner og 14 amter gennem de næste fire år.
Der blev valgt ialt 5.191 medlemmer til kommunalråd og amtsråd.

I modsætning til folketingsvalg, hvor kun danske statsborgere kan stemme, kan næsten alle mennesker med fast bopæl i Danmark stemme til kommunal-valget. Stemmeret har alle, der er fyldt 18 år og har dansk statsborgerskab eller har boet i Danmark og været tilmeldt folkeregisteret i mindst tre år.

Adskillige indvandrere var også opstillet som kandidater. Ved forrige valg i 1985 var 45 indvandrere kandidater, og ved dette valg kunne man stemme på 79 indvandrere fra 15 lande. De fleste var opstillet i og omkring København. Der var opstillet syv rene indvandrer-lister, mens de øvrige stillede op på partilister for Socialdemokratiet, Venstre og SF (Socialistisk Folkeparti).

Kun indvandrere på partilisterne opnåede valg, bl.a. en tyrker på Venstres liste i Farum nord for København, to tyrkere på SF's liste i Ishøj, syd for København og to indvandrere på den socialdemokratiske liste i København. Den 29 årige pakistanske kvinde, Lubna Elahi, blev den største stemmesluger blandt indvandrerne med 2924 personlige stemmer på SF's liste i København.

(Hvis indvandrere og flygtninge skulle have besat lige så stor en andel af pladserne i byrådene, som deres andel i befolkningen (cirka 1,7 %), så skulle de have haft cirka 80 pladser).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(14 பக்கத் தொடர்ச்சி).

6. ஐரோப்பாவில் அதிக மலைகள் கூடியுள்ள நாடு எது?
7. பூமிக்கு மிக அண்மையிலுள்ள நட்சத்திரம் எது?
8. 1960ம் ஆண்டு உதைபந்தாட்டத்தில் [Football] தங்கப் பதக்கத்தை பெற்ற நாடு எது.
9. கிரெம்லின் சுவரின் நிறம் என்ன?
10. 2001ம் ஆண்டு தைமாதம் 1ந்திகதி எந்த கிழமை நாளாக அமைகின்றது.

Ikke alle de politiske partier stiller op til valgene i alle kommuner og amter, men de fleste partier gør. I forhold til folketingsvalgene får Socialdemokratiet og partiet Venstre traditionelt flere stemmer ved kommunal-valgene. Det hænger også sammen med, at disse to partier har langt de største partiorganisationer med mange lokale afdelinger. I de sidste fire år har 117 kommuner således haft en Venstre-borgmester, og 98 kommuner - og her i blandt de største - har haft socialdemokratiske borgmestre.

Der er nok en landspolitisk tendens i kommunalvalget, men den dækker over store forskelle. For eksempel blev en socialdemokratisk borgmester i Holstebro væltet til fordel for en ny borgmester fra Venstre, mens det modsatte skete i Viborg.
På landsplan gik Socialistisk Folkeparti en smule tilbage, Socialdemokratiet en anelse frem, mens Fremskridtspartiet og Venstre gik frem på højre side på bekostning af de andre borgerlige partier.

Langt fra alle kommuner og amter var præget af en hidsig valgkamp op til den 21. november. Emnerne for de lokale valgkampe var mange. Ting som skoleplanlæg og lukning af mindre skoler, nye børnehaver og fritidshjem og først og sidst penge gik igen i mange kommuner. Mange steder blev flertallet i det gamle byråd kritiseret for at have brugt for mange penge og for at fastsætte for høje skatter.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Flygtninge og indvandrere blev også et emne i valgkampen. I Ishøj kommune syd for København fik den socialdemokratiske borgmester, Per Madsen over halvdelen af stemmerne, og hans parti gik fra 9 til 12 mandater ud af byrådets 17. Per Madsen så valgresultatet som en støtte til hans krav om en stramning af flygtningepolitikken.
Han ønsker en mere ligelig fordeling af indvandrere og flygtninge på de enkelte kommuner, og han vil have strammet reglerne for familiesammenføring.
Det samme har Fremskridtspartiets kandidater krævet. Flere af dem har også foreslået folkeafstemninger, og en kommune skal lukke flere flygtninge ind.
Fremskridtspartiet gik kraftigt frem fra 29 til 218 mandater i byrådene. Men det er umuligt at sige, hvor mange stemmer, de har fået på grund af deres flygtningepolitik.
Kravet om kommunale besparelser og lavere skat har også givet stemmer til Fremskridtspartiet.

De 5191 nyvalgte starter arbejdet i byråd og amtsråd fra 1. januar. Og de skal ikke kun høre fra vælgerne til valgene hvert fjerde år. Har man et problem eller en god idé, kan man kontakte de folkevalgte medlemmer. Navne og telefonnumre kan man få oplyst på rådhuset, og ofte har formændene for rådenes faste udvalg en fast ugentlig træffetid.

Per Daugbjerg
Holstebro

## அடகுபோன ஏரி

அவுஸ்ரேலிய அரசு தான் வா-
ங்கிய 50 டொலர் கடனுக்காக
தன் நாட்டைச் சேர்ந்த ஆல்பன்
என்ற புகழ்மிக்க ஏரியை அடகு-
வைத்தது. அரசுக்குக் கடன் கொ-
டுத்த ஹென்ஸ்லே ஹீவர் என்ப-
வர் 28 சதுர கி.மீ பரப்பளவுள்ள
இந்த ஏரியில் மீன் பிடிக்கவும், கரை-
யில் வசித்துவந்த மீனவர்களிடம்
வரி வசூலிக்கவும் உரிமை பெற்றார்.
இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பணத்-
தைக் கொடுத்து ஏரியை மீட்டது.
இது நடந்தது 1592ஆம் ஆண்டு.
—ஜன்னி. கல்கண்டு.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குழந்தை பிறப்பதற்கு முன் அதன் வளர்ச்சி

கருமுட்டையில், விந்து சேர்ந்தபின் - நடைபெறும் வளர்ச்சியின் முடிவில் உண்டாவது குழந்தை. பிறந்த குழந்தையின் உடலில் 200 கோடி செல்கள் இருக்கின்றன. குழந்தை பிறப்பதற்கு மூன்று மாதத்திற்கு முந்தைய அதனுடைய வளர்ச்சி பின் எல்லாவற்றையும் விட மிக அதிகம்.




**கர்ப்ப காலம்:**

பெண்களின் கர்ப்பகாலம் 266 நாட்கள்-38 வாரம். வைத்தியர்கள் 40 வாரம் எனக் கணக்கிடுவார்கள்.

**கரு உருவாகும் காலம்: முதல் வாரம்:**

a. விந்துவின் நீளம் 0.05 M.M. கருமுட்டையின் விட்டம் 1 M.M.
b. 5 வாரம்: 2 M.M நீளம்.
c. 7 " : 1.3 C.M "
d. 9 " : 3 C.M "
e. 11 " : 5 C.M "
f. 12 " : 9 C.M "
g. 16 " : 18 C.M "
h. 20 " : 25 C.M "

| காலம்: | அளவு: | எடை: |
|---|---|---|
| i. 24 வாரம் | 35 C.M | 623g |
| j. 28 " | 38 C.M | 907g |
| K. 32 " | 43 C.M | 1.8kg |
| L. 36 " | 46 C.M | 2.38kg |
| M. 40 " | 50.8 C.M | 3.18kg |

இதுவோர் சராசரிக் கணிப்பாகும். தாய் கர்ப்ப காலத்தில் உண்ணும் ஊட்டச்சத்தைப் பொறுத்தும், குழந்தையின் வளர்ச்சியில் மாற்றமிருக்கும்.

www.tamilarangam.net

# இத்தாலியில் மிதமீறிய குடிகாரர்கள்.

சாராயச் சத்துள்ள பானங்களைக் குறித்துப் பேசுகையில் "இல் கொரி டெல்லா சேரா" என்ற ஒரு மில்லன் செய்தித்தாள் "50" லட்சத்துக்கும் மேற்பட்ட இத்தாலியர்கள், மிதமான அளவு என்று கருதப்படுவதற்கு மேல் இரண்டு மடங்கு அதிகமாகக் குடிக்கின்றார்கள் என்று தெரிவிக்கின்றது. உலக சுகாதார அமைப்பின் படி தினசரி உட்கொள்ளக் கூடிய அளவு ஆண்களுக்கு இரண்டு அவுன்சுகளுக்கும் (சுமார் நாலு கோப்பை திராட்சரச மதுபானத்தில் அல்லது ஒன்றரை லீட்டர் பீரிலுள்ள அளவு) பெண்களுக்கு ஓர் அவுன்சுக்கும் மேல் செல்லக் கூடாது. கருவுற்றிருக்கையில் பெண்கள் முற்றிலுமாக சாராயச் சத்துள்ள பானங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று நிபுணர்கள் பரிந்துரை செய்கின்றார்கள். என்ற போதிலும் இத்தாலியில் மக்கள் தொகையில் 9.2 சதவிகிதத்தினர் தினந்தோறும் நான்கு அவுன்ஸுக்கும் அதிகமாக சாராயச் சத்துள்ள பானங்கள் உட்கொள்ளுகின்றார்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது!

இப்படிப்பட்ட மதிப்பீடுகள் இத்தாலியை சாராயச் சத்துள்ள பானங்களின் பயன்பட்டளவில் ஐரோப்பாவில் இரண்டாவது இடத்திலும் உலகில் எட்டாவது இடத்திலும் வைக்கிறது. இப்படியாக அளவுக்கு அதிகமான குடியே இத்தாலியில் 30 சதவிகித மருத்துவ மனைப் பிரவேசத்துக்குக் காரணமாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. கூடுதலாக சாராயச் சத்துள்ள பானங்களின் துர்ப்பிரயோகமே 40 சதவிகித கார் விபத்துக்களுக்கும், 50 சதவிகித மனித கொலைகளுக்கும், 25 சதவித தற்கொலைகளுக்கும் 20 சதவிகித வேலை செய்யுமிடத்திலும் வீட்டிலும் நடைபெறும் விபத்துகளுக்கும் காரணமாயிருப்பதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிடுகின்றது ___ நன்றி - 'விழித்தெழு' ___

வறுமை நிலைக்குப் பயந்துவிடாதே
திறமை இருக்கு மறந்துவிடாதே

சிந்தித்துப் பார்த்து செய்கையை - மாற்று - தவறு
சிறிதாக இருக்கையில் திருத்திக்கொள்.

www.tamilarangam.net

# துடக்குக் கழிப்பு

- மீரா -



பனி பூப் போல
மெதுவாக காற்றில் அசைந்தாடி
யபடி இறங்கிக் கொண்டிருந்தது.
வழமைக்கு மாறாக அன்று வானம்
பிரகாசமாயும் வெளிச்சமாயும்
இருந்தது. மாலை நான்கு மணி
யாகியும் டிசம்பர் மாதத்தில் இ
ருட்டாமல் இவ்வளவு தெளிவாக
இருப்பது அரிது.
அதுவும் ஞாயிற்றுக் கிழமையில்
போக்குவரத்துக் குறைவு காரண
மாக ரோட்டில் விழுந்த பனி
யை அழித்துச் செல்ல ஏதும் இல்
லாததால் ரோட் பஞ்சு மெத்தை
போல் மெது மெதுவாக உயர்ந்து
கொண்டு வந்தது. அந்த மெத்தை
யில் நிமிர்ந்தபடியே படுத்துக் கொ
ண்டு மூக்கின் நுனியில் விழும்
பனியின் மென்மையை அனுப
விக்க வேண்டும் போல் ஒரு
நினைப்பில் ரோட்டின் கரையில்
அமைக்கப்பட்டிருந்த இரும்பு வே
லியில் உட்கார்ந்து கொண்
டிருந்தான் வரதன்.
கையில் இருந்த சின்னப் பாசல்
சுமையுமாப் போல் இருக்கவே
அதன் வின்ரர்க் கோட்டுக்குள்
வைத்து விட்டு, சின்ன வயதில்
பாலத்தடியில் நின்று ஆறு பிரவா
கம் எடுத்து பாய்வதை நேரம்
போவது தெரியாமல் பார்த்துக்
கொண்டு நிற்பது போல் இதை
யும் பார்த்துக் கொண்டு நிற்க
லாம் என்று எண்ணினாலும் பாசு
ல் அவனை அவசரப் படுத்தியது.
அவனைப் போல்
இந்த டென்மார்க் நாட்டுக்கு
வந்த ஓர் தமிழ்த் தம்பதியினரின்
மூத்த குழந்தை டெரெப்புக்கு இன்
று துடக்குக் கழிவு.
அந்த நகரத்தில் உள்ள அனைவரு
க்கும் தமிழர் எல்லோரையும்
கூப்பிட வேண்டும் என்ற கொ
ட்பாட்டின் படி
வரதனுக்கும் அழைப்பு வந்திருந்
தது. தனது பொருளாதாரத்திற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேற்ப ஓர் சின்ன விளையாட்டுச் சாமான் வேண்டி அதை வடிவாகச் சுற்றி எடுத்துக் கொண்டு வெளிக்கிட்டவன் இயற்கை தடுத்து இரும்பு வேலிமேல் உட்காரப்பண்ணி விட்டது.

அன்பளிப்பின் பெறுமதி மிகக் குறைவு தான், காப்புப் போட்ட மாமா மோதிரம் போட்ட மாமி, என்கிற மாதிரி இலிக்கி வேண்டித் தந்த மாமா என்று யாரும் சொல்ல மாட்டினம், என்றாலும் குழந்தை டெறை அந்த இலிக்கியுடன் தொட்டுத் தடவி, நக்கி வாயில் வைத்ததெல்லாம் ஆளியாரும் என்ற திருப்தி, வரதனுக்கு.

துடக்குக் கழிவு

பொதுவாக காலை அல்லது மத்தியான வேளையில் தான் நடைபெறும். இது துடக்குக் கழிவுப் பார்ட்டி. ஆகவே தான் பின்னேரத்துக்கு வைத்துள்ளார்கள். ஆறால் துடக்குக் கழிப்புக்குப் போகாமல் இப்படியே இருட்டும் வரை இந்த அழகை ரசிக்கலாம் என்ற நினைவு வரதனுக்கு. இப்போ பனியுடன் கொஞ்சம் காற்றும் நேரே நிலக்குத்தாக வந்து கொண்டிருந்தது. பனி ஒரு சாய்வாக விழுந்து கொண்டிருந்தது. ஆறால் ஒரு சின்னக் குளிர் தொடங்கியது. காற்றில் பனி உருகும் போது அப்படி ஒரு குளிர் இயற்கை. ஆறால் அந்தப் பால் போன்ற பனி மேகங்களுக்குமேல் பனிகொட்டிக் கொண்டிருக்கையில் அந்தக் குளிர் ஓர் பொருட்டல்ல.

"என்ன வரதன் மாஸ்ரர்! கம்பி வேலிக்கு மேல் தனிய இருந்து கொண்டு..... ஏதும் கவிதைக்கு காசு அனுப்புற பிரச்சினையோ"

"தொழில் ஒரு தரம் பட்டது. துடக்குக் கழிவுக்குப் போக நாலைந்து பேராய் நின்றார்கள். "சரி போவோம்" என்றபடி வேலியில் இருந்து இறங்கினாலும் வரதனுக்கு மனதுள் ஓர் எரிச்சல் கண்டது.

டென்மார்க்கில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் படிப்பிப்பதால் எல்லோரும் வரதன் "மாஸ்ரர்" என்பதையும் சேர்ந்து மரியாதையாகத்தான் அழைப்பார்கள். அந்த மரியாதையும் கஸ்ரப்பட்டு இவர்களுடன் சேர்த்துக் காப்பாற்ற வேண்டியுள்ளதே என மனதுள் புழுங்கிய படியே துடக்குக் கழிவு வீட்டு வாசல் நோக்கி நடந்தான்.

அழைப்பு மணியை அழுத்தினார்கள். கதவு திறந்து கொண்டது.

நேற்றைய ராத்திரியின் சுகத்தை நினைத்து சிலுக்கி உருகிக் கொண்டு நின்றாள். வெள்ளி சரிகைகள் சுவர்களிலும் சாறிப் போடர்களிலும் மின்சார ஒளிபட்டு மின்னிக் கொண்டிருந்தது. PIONEER SET இன் சத்த அடிப்பிற்கு ஏற்ப கலர் பல்புகள்

www.tamilarangam.net

தமது ஒளியைக் குறைத்தும் கூட்டியும் ஹோலை இருளமைப்படுத்தியது. ஹோல் ஏறக்குறைய நிரம்பி விட்டது. இன்னும் சிலர் வரவேண்டும், போனதும், சேர் பொன்னம்பலராமநாதன் தனித் தமிழ் நாடு கேட்டிருக்கலாம் என்பதில் தொடங்கி இந்தியன் ஆமி வர யார் காரணம் என்பது வரை ஓர் மூலையிலும், சிங்கப்பூர் ஹனிபா ரெக்ஸ்ரெயில் கடைசியாக வந்த சேலையின் ரகம் எவ்வாறு என்பது தொடங்கி மூலவீட்டுக்காரர் பவுண் 1200 குரோன் விற்பது நியாயமா என்பது வரை இன்னோர் மூலையிலும் இவர் பாடசாலைக்காசு 42ம் சட்ட உதவித்தொகைக் குறைப்பு, வெப்ப மின்சார வேலை நிர்ணயக்கட்டுப்பாடு என்ற இத்தியாதி விடையங்கள் ஆங்காங்கே அலசப்பட்டுக் கொண்டிருந்தது.

அனைவரையும் "வந்தது சந்தோசம்" என்றும் புன்னகையும் தலையாட்டலுடனும் குழந்தையின் தகப்பன் சிவா அங்கும் இங்குமாக ஓடியாடியபடியும் வந்தவர்களுக்கு தேனீர் எல்லாம் கொடுத்ததா என்றும் பார்த்துக் கொண்டு திரிந்தான். சிவாவுக்கு வயது இருபத்தாறு தான். சாவகச்சேரி தெற்குக் கதிரேசப் பிள்ளை உடையாரின் மகன் வழிப் பேரன் ரிபேக்கல் ஆசிரி சண்முகரட்ணம் ஆசிரியரின் மகன். G.C.E O/L இல் மூன்று வருடம் வீணடித்து விட்டு இயக்க ஈடுபாடுகள் என இரண்டு மூன்று வருடம் விட உயிருக்குப் பயந்தும், பணம் காசுடன் வரட்டும் என தகப்பன் சிங்கப்பூர் கொம்பனி ஒன்றிற்கு அனுப்பி அங்கிருந்து என்ற புதுக் கௌரவத்துடன் வர உடையார் குடும்பம் விதானையார் குடும்பத்துடன் விட்டுப் போன சொந்தம் கொண்டாட ஓவிசியர் கனகரத்தினத்தின் மூத்த மகள் சசிக்கு திருமணம் முடிந்து இங்கு வந்து தான் சிவா குடும்பம்.

"சிவா, அன்ரி எல்லோரையும் கவனித்தாச்சு, இப்ப வந்த வரதன் மாஸ்ரர் மற்ற அவரோடை வந்த நாலைந்து பேருக்குந் தான் இன்னும் நீ கொடுக்க வேணும்" என்றபடியே பக்கத்தே வந்து கூறினான் தேனீர் பரிமாறியவன்.

"சரி குடுங்கோ" என்றபடியே அங்கிருந்து விலத்தி இன்னும் நாலைந்து கதிரைகள் எடுத்து வர வெளிக்கிட்ட சிவாவை "நீ முடிஞ்சுது, திருப்பக் கலக்க வேணும்" என்ற குரல் நிறுத்தியது.

"ஓ அன்ரி! அறைக்கே குழந்தைக்கு வெளிக்கிடுத்திக் கொண்டு இருப்பா, கூட்டிக்கொண்டு வாறேன்" என்றபடியே அன்ரியைத் தேடிக் கொண்டு அறைக்குப் போறான்.

அன்ரி! திருமணமாகி ஓர் நாற்பது அன்றில் அதற்கு மேலுள்ள இந்த நாட்டுக்கு வந்த அனைத்துப் பொம்பிளைகளையும் அன்ரி என்று மற்றத் தமிழர் உறவுமுறையுடனும் அன்புடன் அழைப்பது வழக்கம். இந்த அன்ரியுடன் அவர்களுக்குரிய விசேட தன்மைகளும் சிலவேளை இணைந்து ஒட்டிப்

(தொடர்ச்சி 43 பக்கம்)

ஒருவர்:- என்ன தம்பி இந்தக் குளிருக்கே, வெறுஞ் சேட்டோடை திரியுறாய்....?

இளைஞன்:- இல்லை... நான் கனயூரோப் அருபட்டறன் பழகிப் போச்சு....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவிஞர் தோக்கிலுடன் ஒரு சந்திப்பு

மௌனி

இன்று எல்லா நாடுகளிலும் கிராமிய இலக்கியங்கள், பழைய இலக்கியங்கள், நாடோடிப் பாடல்கள், நாட்டார் பாடல்கள் என்பன பொதுவாக எல்லா இடங்களிலும் அழிந்து போகின்றது. தற்போது இலங்கை இந்தியா, மேலும் பல ஐரோப்பிய நாடுகளிலும் அழிந்து போகும் எழுத்து வடிவங்களற்ற இந்த இலக்கியங்களை சேகரித்துப் பாதுகாப்பதும், புதிய புதிய புத்தக வடிவங்களில் வெளியிடுவதும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஆனால் இவற்றை குறிப்பிட்ட ஒரு சிலர்தான் செய்து வருகின்றார்கள். இந்த வகையில் டென்மார்க்கைப் பொறுத்தவரையில் டெனிஸ் நாட்டார் பாடல்களைச் சேகரிப்பதும் பாதுகாப்பவர் என்ற வகையிலும், கொல்ஸ்ரப்புரோவுக்கும், கோர்ணிங்குக்கும் இடையில் இருக்கும் கோயா (Hogaer) என்ற இடத்தில் இருக்கும் "FolkMusik HUSET" என்ற பாடசாலையின் பிரதம பொறுப்பாளர் திரு. தோக்கில் (Thorkild) அவர்கள் சஞ்சீவி வாசகர்களுக்காக இங்கு பேட்டி காணுவதில் மிகவும் மனமகிழ்ச்சியடைகின்றோம்.





கே:- இந்த அமைப்பை ஏன்? ஆரம்பிக்க வேண்டும் என நீங்கள் விரும்பினீர்கள்?

பதில்:- நடைமுறைகளில், பாவனைகளில் இருந்த வாய்மொழிப் பாட்டுக்கள் காலம் செல்லச் செல்ல அதனுடைய பாவனைகள் குறைந்து கொண்டு போகின்றது. இதனால் இது முறைமையாக அழிந்து கொண்டு போவதால் இவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்பதால் தான் இப்படி ஒரு அமைப்பை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாக்கினேன். எமது நாட்டில் இருக்கின்ற வயது போன பழமை வாய்ந்த மக்களிடம் சென்று கேட்டு தெரியும் ஒலிப்பதிவு செய்தும் வைத்திருக்கின்றோம். எனக்கு முதல் ஒருசிலர் தனிப்பட்ட முறையில் இப்படிச் செய்து வந்தார்கள், பின்பு நான் தான் 1971ம் ஆண்டு இப்படி ஒரு அமைப்பாக நிறுவிச் செய்து வருகின்றேன். தற்போது இதற்காக கலாச்சார அமைச்சு, கொமுனே போன்றன எமக்குத் தாராளமாக உதவி புரிகின்றது.

கேள்வி:- இப்படியான அமைப்புக்கள் டென்மார்க்கில் எங்கெங்கு காணப்படுகின்றது, எத்தனை காணப்படுகின்றது?

பதில்:- கொப்பனேக்கனிலும்(København) சீலண்டிலுள்ள போர்புய் (Borby) என்ற இரு இடங்களிலும் இருக்கின்றது. இருந்தாலும் அங்கிருப்பவர்கள் எம்மைப் போல் முழுநேரமாகச் செயற்படுவதில்லை, பொழுதுபோக்கிற்காகவும், ஓய்வு நேர வேலைக்காகவும் இருமணித்தியாலங்கள் வேலை செய்கின்றார்கள். ஆனால் எமது இடத்தில் முழுநேரமாக வேலை செய்வதற்கு நான்குபேர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

கேள்வி:- இந்தப் பதினெட்டு வருட இடைவெளியில் எவ்வளவு பாடல்களைச் சேகரித்துள்ளீர்கள்?

பதில்:- ஏறக்குறைய ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட புதிய புதிய மெட்டுக்களையும் சேகரித்துள்ளோம். இந்த அமைப்பு ஆரம்பிப்பதற்கு முன்னர் 'EVALD TANG KRISTERSEN' என்பவர் சேகரித்த சில பாடல்களும் இவற்றுள் அடங்கும்.

கேள்வி:- இந்தப் பாடல்கள் எத்தனை வருடங்களுக்கு முற்பட்டவை

பதில்:- எங்களிடம் இருப்பவைகளில் பெரும்பாலானவை ஐந்நூறு வருடத்துக்கும், சிலது இருநூறு வருடங்களுக்கும் முற்பட்டவை.

கேள்வி:- இந்த ஐந்நூறு வருடத்துக்கும் இருநூறு வருடத்துக்கும் உள்ள பாடல்களுக்கு ஏதாவது வித்தியாசங்கள்

www.tamilarangam.net

காணப்படுகின்றதா?

பதில்:- நிறையக் காணப்படுகின்றது. ஐந்நூறு வருடத்துக்கு முற்பட்டவையை விட இருநூறு வருடத்தான் நிறையப் புதுமையானவை (moderne) ஏன்? இறக்குறைய பத்து இருபது வருடங்களுக்கு முற்பட்ட பாடல்களுக்கும் இப்போது வெளிவரும் பாடல்களும் எப்படி எப்படி வித்தியாசங்கள் இருக்கின்றதோ அதே மாதிரியான வித்தியாசங்கள் தான் அவற்றிலும் காணப்படுகின்றது. இதை விளங்கிக் கொள்வது மிகவும் இலகுவானது.

கேள்வி:- இப்போது வாழும் இளைஞர்கள் நீங்கள் சேகரித்த பாடல்கள் தற்போதும் விரும்பிக் கேட்பார்களா?

பதில்:- நிச்சயமாக, பல இளைஞர்கள், யுவதிகள் இங்கு வந்து, பார்த்துக் கேட்டுவிட்டுப் போகின்றார்கள், நிறைப் பேர் வந்து அறிந்து கொண்டு போகின்றார்கள். உதாரணமாக இங்கு வேலை செய்யும் ஒரு பெண் பெயர் (Tibo) ரிபோ வயது 20. இவள் இதைப் பெரிதும் விரும்பி அது சம்பந்தமாக வேலை செய்ய வேண்டும் என்பதால்த்தான் இங்கு வேலை செய்கின்றாள், ரிபோ ஒரு சிறந்த உதாரணம்.

கேள்வி:- உங்களுடைய நாட்டுப்பாடல்கள், கிராமியப்பாடல்களைப் பாடியவர்கள், இயற்றியவர்கள், மிகவும் வறுமைப் பட்ட மக்கள், பாமரமக்கள் தான் என்பது குறிப்பிடத்தக்கது, இதைத்தான் ரூசிய எழுத்தாளர் திரு. மாக்சிம் கோர்க்கியும் வலியுறுத்திக் கூறுகின்றார், இதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்:- இது முற்றிலும் உண்மையானது. மிகவும் வறுமைப் பட்ட மக்களும், பாமர மக்களும் தான் இவற்றைப் பாடியிருக்கின்றார்கள். ஆனால் அப்போது எல்லா மக்களுக்கும் அவை தெரிந்திருந்தன, குறிப்பாக பொதுவாக எல்லாப் பெண்களுக்கும் அப்பாடல்கள் முழுமையாகத் தெரிந்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கேள்வி:- எமது நாட்டுப்பாடல்கள், கிராமியப் பாடல்கள்; காதல், வீரம், தொழிற்பாடுகள், தாலாட்டு, ஒப்பாரி, போன்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல வகைகளைச் சேர்ந்தவைகள். டெனிஸ் நாட்டுப்பாடல்
கள், எவற்றைப் பிரதிபலிக்கின்றன?

பதில்:- எங்களுடைய பாடல்களும் இவைகளையே நிறைய பிரதிபலிக்கின்றது. ஆனால் ஒப்பாரி (Dødsklager og grædesang) எனப்படும் பாடல்கள், ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன்னரே முழுமையாக இல்லாமல் அழிந்து போய் விட்டது. எம்முடைய சேகரிப்பில் ஒன்று கூட எமக்கு கிடைக்காமல்ப் போனது மிகவும் மனவருத்தம். ஆனால் தாலாட்டுப் பாடல்கள் தாராளமாக இருக்கின்றது. (ஒரு தாலாட்டுப்பாடலைப் பாடிக் காட்டிவிட்டுச் சிரிக்கின்றார்)

கேள்வி:- நீங்கள் சேகரித்தவற்றில் மிகவும் பழமை வாய்ந்தவற்றை பாடிக்காட்ட முடியுமா?

பதில்:- என்னால்ப்பாடுவதை விட இந்தப் புல்லாங்குழல் மூலம் வாசித்துக் காட்டுகிறேன், இது மூன்று ஓட்டைப் புல்லாங்குழல் (Trehulsfløjet) எடுத்துக் காட்டி ஒரு இசையை வாசித்துக் காட்டுகின்றார். (மிகவும் சோகமான இசை- எங்கேயோ கேட்ட மாதிரியுள்ளது)

கேள்வி:- இந்த இசைக்கும், எமது இசைக்கும் நிறையத் தொடர்புகள் இருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன், இதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்:- நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றது, உங்களுடைய இசைக்கு மட்டுமல்ல, துருக்கி, குட்டிஸ்தான், வேறு அரேபிய இசைகளுக்கும் ஒற்றுமைகள் இருக்கின்றது. இவையை விட இதிப்பிட்ட நாட்டு பழைய நடனங்களுக்கும் (Flokdansk) எமது நாட்டு பழைய நடனங்களுக்கும் நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றது...

முரளி:- நேரம் பாராமல் கலந்து கொண்டமைக்கு வாசகர்களுக்காக சஞ்சிகையின் சார்பிலும் எனது தனிப்பட்ட முறையிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தோக்கி:- நன்றி, இந்தச் சஞ்சிகை மூலம் தமிழ் மக்கள் பெரும்பாலோர்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றேன். இந்த நாட்டில் வந்து இப்படி ஒரு தமிழ்-டெனிஸ் இரண்டு மொழியிலும் ஒரு புத்தகத்தை வெளியிடுவதற்கும் எனது பாராட்டுக்கள். சஞ்சீவி வாசகர்களுக்கு எனது நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்.

நிறைவு.

பேட்டி கண்டவர்:- முரளி

# உடைப்பு

என்னை விடுங்கள்
இந்தக் கட்டுக்குள்
அடங்கியிருக்க என்னால் முடியாது
நான் சுதந்திரன்
என் இறக்கைகளை விரித்து
காற்றில் அலைய விட வேண்டும்
யாழ்ப்பாண வட்டத்துள் சுருங்கி
பழமையிலே மூழ்கி
மூலையிலே கிடக்கும் சராசரியல்ல நான்
வெறும் உடலும் அல்ல நான்
ஏதாவது ஓர் தத்துவக் கட்டினை
கதியென வீழவும் முடிவதில்லை என்னால்
நான் சுதந்திரன்
எல்லாவற்றிலும் ஒரு மெய்மை ஒளிர்ந்திருக்கிறது
அவற்றை அறிய வேண்டும்
இந்த பூகோள பரப்பில்
அகமும் புறமும் அலசிட
என்னை விடுங்கள்
தயவு செய்து என்னை விடுங்கள்
எனக்கு பூரண விடுதலை வேண்டும்.

சி. செல்வச்சந்திரன்
நீடசன்
இலண்டன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெயர் போல் அழைப்பதுண்டு. இந்தப்பட்ட இனிப்பு அன்ரிமாரில் எந்த அன்ரியைப் பற்றிக் கதைக்கின்றோம் என்பதை இனங்காண மிகவும் உதவியாய் இருக்கும். அந்த அன்ரி வரிசையில் சிவா வீட்டு துடக்குக் கழிப்பை முன்னின்று நடாத்துவது 'அப்பாக்குட்டி' அன்ரி.

அட்டமி எப்போ கூடுது,.. பஞ்சமி எப்போ விலகுது வருஷம் எப்போ பிறக்குது ---- நல்லூர்க் கொடி எப்போ இறங்குது" என்று சமய சம்பிரதாய முறைகளில் முன்னோடியாக நின்றதால் "அப்பாக்குட்டி தங்கம்மாவை" நினைத்து "அப்பாக்குட்டி" என்று பெயர் சூட்டியிருந்தாலும், "ஸ்ரிங் கேக்கிலிருந்து கோழிக்குழம்பா" வரை அன்ரிக்கு அத்துப்படி. அன்ரி புருஷனுக்குத் தாலி கட்டியிருக்கின்றா என்று மற்றோர் கதைக்கும் வண்ணம் புருஷன் ஓர் அப்பாவி. பல்கலைக்கழகச் சுவர்கள் இடையே தன்வாழ்வை அமைத்துக் கொண்டு ஓர் புது உலக ஆராய்ச்சியில் இறங்கியுள்ள ஓர் கம்பியூட்டர் எஞ்சினியர். 55 வயதில் இன்னும் அந்த படிப்பை தொடர்கின்றார். இன்னும் இங்கு வர அவகாசம் கிடைக்கவில்லை. புருஷன் இல்லாத இடத்தில் பிள்ளைகளைக் கூட்டி வரும் பேற்றை ஆண்டவன் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. முதலாவது பிள்ளையின் அபோர்ஷனைத் தொடர்ந்து எந்தப் பிள்ளையும் வயிற்றில் தங்கவில்லை.

மூக்கின் நுனியில் அரும்பியிருந்த வியர்வையை அவசர அவசரமாக துடைத்தபடி சிவாவின் பின்னால் அன்ரி குசினியினுள் வந்தாள்.

"அன்ரி சரியான பிஸி போலே"

குசினியால் எட்டிப் பார்த்தா. "நீ எப்போ நோர்வேயாலே வந்தனீங்க, நான் சொல்லி விட்ட சாமான்கள் கொண்டு வந்தனீங்களே" "அதை மறப்பேனோ" அங்கிருந்த மற்றவர்களுக்கு அது என்ன சாமான் என அறிவதில் ஓர் சின்ன குறுகுறுப்பு. அப்படி ஆவலைத் தூண்டி ஓர் சஸ்பென்சில் ஆழ்த்துவதில் அன்ரிக்கு ஒரு விதப்பிரியம்.

அன்ரி தேனீர் ஊற்றுவதில் மீண்டும் இறங்கிறா. "சிவா! இனிக் கனக்க ஊத்தத் தேவையில்லை. எண்டு நினைக்கின்றேன், இப்ப வந்த வரதன் மாஸ்ரருக்கும், மற்ற ஐந்து பேருக்கும் கலக்கிறேன். இனி வாற ஆக்களுக்கு யூசிலே கொடுப்போம்."

சிவா சரியெனத் தலையாட்டுகிறான். வரதனுடன் வந்த மற்றைய ஐந்து பேரும் யார் என அன்ரி எட்டிப் பார்த்தா. அன்ரிக்கு முகம் சற்று இறுகியது. ஆனால் வெளிக்காட்டவில்லை. இரண்டு ரேயை எடுத்து வைத்து ஒன்றில் நாலு ரம்ளரும் மற்றைய ரேயில் இரண்டு கிளாசும் வைத்து விட்டு, ரீயை நிரப்பிறா.

"ஏன் அன்ரி! இப்படிச் செய்யிறியள். !!" "சும்மா இருங்கோ சிவா, வரதன் மாஸ்ரரோடை வந்தவையிலே இரண்டு பேர் என்ன ஆக்கள் தெரியுமே, அதுதான் கிளாசிலே, இப்படித்தானே இவ்வளவு நேரமும் பார்த்து இவன் தம்பி இங்கினை இருக்கிறான்.!!"

அந்த நேரம் "ஆஸ்ரேரை ஓங்காத தாரியளோ" என்றபடி குசினியினுள் வந்த வதரத்துக்கு இந்தக் கதை கேட்டு விட்டது. அதை ஜீரணிக்க முடியாமலும் குசினிக்குள் திடீரென வந்ததையிட்டுந்

www.tamilarangam.net

## குண்டு துளைக்காத குறள்!

ரஷ்யாவில் "கிரெம்ளின்" மாளிகையின் கீழ் ஓர் உறுதிமிக்க உலோகத்தாலான (டங்ஸ்டன்) ஒரு சிறிய நிலவறை கட்டப்பட்டுள்ளது. அது அணுக்குண்டு, நீர்வளிக் குண்டுகளின் தாக்குதலுக்கும் அழியாது. ஒரு வேளை மூன்றாம் உலகப் போர் மூண்டு பெரும்பான்மையான மக்கள் அழிய நேரிட்டாலும், மாபெரும் நூல்கள் அழியக் கூடாது; எஞ்சியிருக்கும் சிலராவது எதிர்காலத் தலைமுறையினராவது அந்தக் கருவூலங்களைக் கற்று பயன் பெற வேண்டும் என்ற நோக்கில் உலகப் பேரறிஞர்களின் ஒப்பற்ற சில நூல்கள் அங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் "திருக்குறள்" நூலும் ஒன்று. -நன்றி, இதயம்.

திரும்பவும் முடியாமல் வரதன் பெரிய சங்கடப்பட சிவாவுக்கு என்னவோ போலிருந்தது. ஆனால் அன்ரி அதைப் பற்றி ஒன்றும் பெரிதும் அலட்டிக் கொள்ளாது "எப்படி மாஸ்ரர் சுகமாயிருக்கிறியளோ" என்று சுக விசாரிப்புடன் ஆஸ்ரேயை எடுத்து நீட்டினா.

வரதன் மௌனமாக வாங்கிக் கொண்டு வந்து மீண்டும் கதிரையில் உட்கார்ந்தான். ஆனால் கதிரையில் உட்கார முடியாதவாறு அவனுடலில் எத்தனையோ முட்கள் குத்தியது போல உணர்வு. இப்படி ஒரு கூத்து. இந்த நாட்டில் இன்னும் நடக்குதா என்ற சுவாலை அவனுள் பெற்றோல் பற்றியது போல் இருந்தது. வெளியே பனி கொட்டிக் கொண்டிருந்தது. எந்தப் பனி மழைப் புயல்களும் அவனது சுவாலையை அணைக்க முடியாது. கேவலம்.... கொழும்பில் அகப்பட்டு காம்புகளில் கிடந்தபோது, சென்றால் காம்பில் ஒருவர் பின் ஒருவராக தட்டுடன் ஏந்தி நின்றபோது, வராத பிரிவினைகள் எல்லாம் இப்போ கிளாஸ் வடிவத்திலும், ரம்ளர் வடிவத்திலும் இங்கு உலவுவதா என நினைக்க நினைக்க அவனுக்கு அங்கு இருக்கப் பிடிக்கவேயில்லை. எழுந்து போகவும் ஏனோ முடியவில்லை. ஓர் மாவிட்டபுரம் தேர், கோவில் பிரவேசத்தில் போன உயிர்களின் எண்ணிக்கைகள் காதலித்த குற்றத்துக்காக மௌனமாகச் செய்து கொண்ட தற்கொலைகள் அத்தனையாலும் இந்தச் சாதிக்குப் பசி அடங்காது. இப்பவும் இந்த நாட்டில வந்து ஒரே அடிப்படை வசதிகள் கிடைத்த போதும் கிளாசும் ரம்ளரும் பிரித்துக் கொண்டு நிற்கிறதைப் பார்த்த போது எழுந்து போய் அத்தனை கிளாசுகளையும் உடைக்க வேணும் போல் ஒரு வெறி ஏறியது. ஆனால் உடைப்பதால் பிரச்சினைகள் தீரப் போகின்றதா? அதை உடைத்து உடைப்பதால் நீதான் உடைக்கப்பட்டு தூக்கியெறியப்படுவாய். அதை தவிர்ந்து சேர்ந்திருந்து தான் சற்றுத் திருத்த முடியும், என அவன் அறிவு அவன் மனதை சாந்தப் படுத்த முயன்றது. அறிவுக்கும் மனதுக்கும் ரோசத்துக்கும் சேர்ந்து அவனுள் பெரிய போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

ஆனால் அந்த இருவர் மட்டும் கிளாசில் ரீ தரப்பட்டிருக்கின்றதா? இல்லையா என அறிந்தோ அறியாமலோ ரீயைக் குடித்துக் கொண்டிருந்தார்கள். அன்றி அவர்களைப் பார்க்காத வேறோர்

www.tamilarangam.net

கோணத்தில் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த வரதனின் கண்கள் கலங்கிப் பனித்தது. தொண்டைமடல்கள் எரிச்சலில் சுருங்க, பொக்கற்றிலிருந்த பேனையை எடுத்து தான் கொண்டு வந்த பாசலில் மீது வரி எழுதினான்.

"துடக்கு குழந்தையில் இல்லை" அதைத் தவிர அந்த வேளையில் அவனால் ஏதும் செய்ய முடியவில்லை. கூட்ட நெரி பார்த்து அங்கு என்ன நடக்கிறது என்பதை ஒன்றிக் கவனிக்க முடியவில்லை.

குழந்தைக்கு நகை போடுதல், பரிசுகள், படமெடுப்பு, அன்பளிப்புகள் கொடுத்தல், சாப்பாடு அதைப்பற்றிய விமர்சனங்கள் எல்லாம், ஓர் தாள கதியுடன் முடிவடைந்தது. வரதன் ஒரு ஜடமாகவே எல்லாவற்றிலும் பங்கு கொண்டான். கடைசியாக எல்லோரும் எழுந்து போக, எழுந்த போது தான் தான் அந்தப் பாசலைக் கொடுக்கவில்லை என்ற நினைப்பு வந்தது.

'இந்தாங்கோ சிவா' எனப் பார்சல் நீட்டினான். சிவா, மனைவிக்குப் பக்கத்தில் நின்ற அன்ரியும் என்ன பாசலில் என ஆவலுடன் எட்டிப்பார்த்தாள்.

"குழந்தையில் துடக்கு இல்லை"; அன்ரி பலமாய்ச் சிரித்தபடி "அம்மாயில் இருந்த துடக்கும் போயிருக்கும்" என்று சமயவுரை உணர்த்தினரே தவிர வரதன் எழுதிய காரணத்தை அன்ரி சரி சிவா சரி மற்ற அங்கிருந்த அன்ரியின் வாரிசுகள் சரி புரியாமல் போனது வரதனுக்கு பெரும் வேதனையாக கிடந்தது.

பரிசைச் சுற்றியிருந்த பேப்பர் ஓர் புறத்தே குப்பைத் தொட்டியில் விழ கிலுங்கி கிலுகிலுத்துக் கொண்டு பரிசுகளுடன் போய்ச் சேர்ந்தது.

வரதன் ஜக்கற்றைக் கையில் எடுத்துக் கொண்டு பனியுள் இறங்கினான். இப்போ இன்னும் அதிகமாக பனி கொட்டிக் கொண்டிருந்தது. ஏதோ வரதனுக்கு ஜக்கற் போடத் தோன்றவில்லை.

வரதன் நடந்து கொண்டிருந்தான்.

அடுத்த நாள் மொழிப் பாடசாலைக்குப் போக ஏனோ வரதனுக்கு மனமில்லாது போகாமல் படுக்கையை விட்டு எழாது இருந்தான். நேரம் பத்துமணியைத் தாண்டிக் கொண்டு இருந்தது. வானம் வெளிச்சுச் சென்றிருந்தது. இன்று இன்னமும் பனி கொட்டவில்லை.

இரவின் துடக்குக் கழிவு பார்ட்டி நிகழ்ச்சிகள் மட்டும் மனதில் படம் போல் ஓடிக் கொண்டு நின்றது. மறக்க முனைந்து முயன்று பார்த்து தோல்வி தான் எஞ்சியதே தவிர மனத்தில் மப்பும் இருட்டும் அகலவில்லை, எவ்வளவு நேரத்திற்குத் தான் இப்படிப் படுத்திருப்பது, என யோசித்த வரதனை டெலிபோன் மணி அடித்து எழுப்பியது.

"மாஸ்ரரோ கதைக்கிறையள்"

"ஓம் சொல்லுங்கோ நீங்கள் யார்." "அது நான் மூர்த்தி ஒரு விஜயம் தெரியுமே"

"என்ன?"

"இன்றைச பள்ளிக்கூடம் எல்லாம் கூடயா, மாயா என்று போட்டுது."

"சத்தி வன்னக்காமே விஜயத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தைச் சொல்லுங்கோ"
"ராத்திரி யாரோ அன்ரி வீட்டு யன்னலையும் சிவா வீட்டு யன்னலையும் கல்லாலே எறிஞ்சு உடைச்சுப் போட்டாங்களாம்" "உண்மையாகவோ...?" "ஓம் மாஸ்ரர், ஆனால் ஏன் எதுக்கு என்று தெரியேலே. பின்னேரம் நேரே வீட்டை வாறென். இப்ப ரெலிபோனை வைக்கிறேன்." "ஓம் மூர்த்தி"

வரதனுக்கு உதட்டுக்குள் ஓர் புன்னகை தோன்றியது. "ஏன் என்று எனக்குத் தெரியும் மூர்த்தி! என்னிலும் விட ஓர் வீரன் இந்த ஊருக்கை இருக்கிறான். ஆனால் யார் அவன் என்று எனக்கும் தெரியவில்லை. ஒன்று மட்டும் உண்மை இப்பதான் "துடக்கு கழிஞ்சிருக்கு" வரதன் தனக்குள் தானே கூறியபடியே யன்னலடிக்குப் போய் அறையின் வெட்டைத் திர யன்னலைத் திறந்தான்.
இப்போ பனி மீண்டும் பூப்பூப் போல மெது மெது வாக...
"....

(யாவும் கற்பனை)

— மீரா —

## மீராவின் — தொடர் — நவீனம்.
## இங்கு தொடர்கிறது....

டென்மார்க்கில் பலர் மத்தியிலும் கவரப்பட்டதும், தமிழோசையில் வெளியானதுமான "காலங்களும் - கருத்தோட்டங்களும்" என்ற பகுதி 1990ன் புத்தாண்டு மலரிலிருந்து தொடர்கின்றது....

## மலைப்பிரசங்கத்திலிருந்து
மத்தேயு: 5 (3-10)

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக இராச்சியம் அவர்களுடையது.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடைவர்.

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தி அடைவார்கள்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோகராச்சியம் அவர்களுடையது.

www.tamilarangam.net



# புனர் ஜென்மம்

அந்தக் கிராமத்தின் ஒதுக்குப்புறத்தே ஒரு சுடுகாடு. நாற்புறமும் ஓங்கி வளர்ந்த ஆலமரங்கள் மயானத்தில் பயங்கர இருளை உண்டாக்கியது.

நள்ளிரவு மணி பன்னிரண்டு. எங்கேயோ ஒரு கோவில் மணி அடித்து ஓய்ந்தது. நாய்களின் ஊளையிடும் சத்தமும் ஆந்தைகளின் அலறலும் பயங்கர சூழலை ஏற்படுத்தியது.

மயானத்தின் மத்தியில் ஒரு மனிதன், எதையும் பொருட்படுத்தாமல் அங்கே ஒரு சவக்குழியைத் தோண்டிக்கொண்டிருந்தான். சவக்குழிக்குள் ஒரு சவப்பெட்டி. பெட்டிக்குள்ளே ஒரு இளம் பெண்ணின் பிரேதம் இருந்தது.

அந்தப் பெண் ஒரு செல்வந்தருடைய மனைவி. அவள் இறந்த பொழுது அவளது இறுதிக் கிரியையில் அவளது தங்க நகைகளை அணிவித்து அவற்றைக் கழற்றாமல் அவளைப் புதைத்திருந்தார்கள்.

பிணத்துக்குப் போடப்பட்ட நகைகளைக் கழற்றுவதுதான் அந்த மனிதனின் திட்டம். நகைகளைக் கழற்றிய அவன் எஞ்சியிருந்த கனமான தங்கச் சங்கிலியைக் கழற்றுவது அவனுக்குச் சிரமமாக இருந்தது. சங்கிலியை இழுத்து அறுப்பதற்காக பிரேதத்தின் நெஞ்சில் ஒரு கையால் அழுத்தியபடி மறுகையால் சங்கிலியை இழுத்தான். அவனது கை பிரேதத்தின் நெஞ்சை அழுத்திய போது பிரேதத்தின் வாயிலிருந்து 'புஸ்' என்று சிறு சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து பிரேதத்தின் கண்கள் திறந்து கொண்டன. இதைக் கண்ட அந்த மனிதன் பயத்தால் அலறியடித்து ஓடி மறைந்துவிட்டான்.

பிரேதப் பெட்டியிலிருந்து எழுந்தாள் அவள். தானிருப்பது மயானம் என்பதை உணர்ந்தாள். அச்சத்துடன் அங்கிருந்து ஓட்டமும் நடையுமாக தனது வீடு நோக்கி விரைந்தாள்.

சுடுகாட்டிலிருந்து வீடு சென்ற அவள் தனது கணவன் முற்றத்திலே உலவிக்கொண்டிருப்பதைப் பார்த்தாள். இரும்புக் கதவு பூட்டப்பட்டிருந்தது. அவள் கணவனைக் குரல் கொடுத்து அழைத்தாள்.

"என்னங்க! நான்தான் உங்க மனைவி வந்திருக்கிறேன். கதவைத் திறவுங்கோ" என்று கெஞ்சினாள்.

அவரது இளம் மனைவி பாம்பு கடித்து மரணமடைந்து அன்றுதான் புதைத்துவிட்டு வந்திருந்தார். திடீரென்று ஒரு பெண் அந்த அர்த்தராத்திரியில் வீட்டுக்கு வந்து நின்று கொண்டு குரல் கொடுப்பதைக் கண்டு பயப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது பிசாசின் சேட்டையாகத்தான் இருக்கும். இறந்த தனது மனைவி பேயாக வந்திருப்பதாக நினைத்துக் கொண்டார்.

"கதவைத் திறக்கவேண்டாம், இங்கிருந்து போய்விடு" என்று கத்தினார்.

"இஞ்சேயுங்கோ நான்தான் வந்திருக்கிறேன். கிட்டவந்து என்னைத் தொட்டுப்பாருங்கோ" என்று மீண்டும் கேட்டாள்.

அவர் கதவைத் திறக்க மறுக்கவே கதவின் மேல் ஏறிக்குதிக்க முற்பட்டாள். உள்ளே சென்று அவரது கணவன் துப்பாக்கியை எடுத்துவந்து அவளை நோக்கி இருவேட்டுக்கள் சுட்டார். ஆனால் ஒன்றும் அவள் மீது படவில்லை. தனது கணவர் இன்னும் தன்னை நம்பவில்லை என்பதை உணர்ந்தவள் அங்கிருந்து ஓட்டமும் நடையுமாக அவளது வீட்டிலிருந்து மூன்று மைல்கள் தூரத்தே உள்ள பொலீஸ் ஸ்டேஷனை அடைந்தாள்.

பொலீஸ் இன்ஸ்பெக்டர் அவளை உட்காரவைத்து சகல விபரங்களையும் கேட்டறிந்து கொண்டார். நடந்தவற்றை விபரமாகக் கூறினாள். அவளைப் பொலீஸ் நிலையத்தில் பாதுகாப்பாக விட்டுவிட்டு நான்கு பொலீஸ் கான்ஸ்டபிள்களோடு ஜீப்பில் சென்று அவளது கணவனை அழைத்தார்.

இரவு மணி இரண்டு.

ஜீப் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தார். வந்திருப்பது பொலீஸார் என்பதை அறிந்து கதவைத் திறந்து அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

"நீங்கள் ஒருக்கால் எங்களோடை பொலீஸ் ஸ்டேசனுக்கு வரவேணும்" இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொண்டார்.

"என்ன விஷயம்? நான் ஏன் வரவேணும்?"

"உங்கள் மனைவி பொலீஸ் ஸ்டேசனுக்கு வந்திருக்கிறா. அவவை உங்களோடு விட்டுவிடுவதற்காகத்தான் உங்களை கூட்டிச் செல்ல வந்திருக்கிறோம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இன்ஸ்பெக்டர்! என் மனைவி பாம்புகடித்து இறந்து இன்றைக்குத்தான் அடக்கம் செய்தனாங்கள். அவள் திரும்பவும் உயிரோடு வந்திருக்கிறாள் என்றால் என்னால நம்பமுடியாமல் இருக்கு".

"நடந்த சம்பவம் என்னவென்பதை நாங்கள் தெளிவாக அறிந்துதான் வந்திருக்கிறோம். நீங்கள் பயப்படாமல் எங்களோடை வாங்கோ" இன்ஸ்பெக்டர் கடுமையான தொனியில் கூறினார்.

*

பொலீஸ் ஜீப்பில் அரைமனதோடு ஏறிக்கொண்டார். ஸ்டேசனை நோக்கி வண்டி விரைந்தது.

அவருடைய மனைவி நாற்காலி ஒன்றில் இருந்ததைக் கண்டவருக்கு வியப்பாக இருந்தது. தான் காண்பது கனவா நனவா என்பது புரியாமல் கண்களை ஒருமுறை கசக்கிவிட்டுப் பார்த்துக் கொண்டார்.

கணவனைக் கண்டதும் அவள் கூனி அழத் தொடங்கிவிட்டாள்.

இருந்தாலும் பேய், பிசாசு என்ற பயம் இன்னும் நீங்கவில்லை அவருக்கு. அவளுடைய கால்கள் நிலத்தைத் தொடுகின்றனவா என்று வெளிச்சத்தில் கூர்ந்து அவதானித்தார். அவருடைய சந்தேகம் நீங்கிவிட்டது இப்போது.

நகைகள் கழற்றிய கள்வனை ஏற்கனவே பொலீஸார் கைதுசெய்து கூண்டில் அடைத்து வைத்திருந்தார்கள்.

அவனை இரண்டு பொலீஸார்கள் அழைத்துவந்தனர்.

சுடுகாட்டில் நடந்தவற்றை அங்கிருந்த கள்வோன் ஒன்றுவிடாமல் விபரமாக எடுத்துக் கூறினான்.

www.tamilarangam.net

"இன்ஸ்பெக்டர் ஐயா! நான் ஒரு ஏழை. திருடித்தான் என்னுடைய காலத்தைக் கடத்துறன். அண்டைக்கு இரத்தின மாலை நகையோடை புதைச்சிருக்கிற விஷயம் கேள்விப்பட்டு இறுதியாக் கழுத்தில போட்டிருந்த சங்கிலியை அறுக்க இவவின்ரை நெஞ்சில கையால அமத்திக் கொண்டு சங்கிலியோடை இருந்தன். அப்போ இவவின்ரை வாயிலையிருந்து 'புஸ்' என்டு சத்தம் வந்தது. கண்களும் திறந்து முழிச்சா. நான் பயத்தில பாய்ஞ்சு ஓடிட்டன். அதுக்குப் பிறகு நடந்தது எனக்கு ஒண்டும் தெரியாது".

இன்ஸ்பெக்டர் விளக்கினார்.

"மிஸ்டர்! உங்கள் மனைவிக்கு பாம்பு கடிச்ச பிறகு உயிர் அடக்கத்தில இருந்திருக்கிறது. அவர் இறந்துவிட்டதாக நினைத்து அவவை அடக்கம் செய்தது நீங்கள் செய்த பெரும் தவறு. இந்தக் கள்ளன் உங்கள் மனைவியின் நெஞ்சில் கையால் அமத்திய பொழுது அவவுடைய இருதயம் வேலைசெய்யத் தொடங்கிவிட்டது. அவர் இப்போ உங்கள் முன்னிலையில் உயிரோடு இருக்கிறார். ஆகவே நீங்கள் பயமில்லாமல் அவரைக் கூட்டிச் செல்லுங்கள்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

அவருடைய கண்களுக்கு இப்போது உண்மை புரிந்துவிட்டது. சந்தோசத்தால் முகம் மலர்ந்தது. மனைவியை அவரோடு அணைத்தபடியே இன்ஸ்பெக்டருக்கு நன்றி தெரிவித்தார்.

அவர்கள் இருவரையும் ஏற்றுக்கொண்டு ஜீப் அவர்கள் வீடு சேர்ந்தது.

தம்பதிகள் இருவரும் ஆனந்தக் களிப்பில் மூழ்கினார்கள்.

முற்றும் *கே. ஆர்*

---

(52ம் பக். தொடர்ச்சி)

ராசன் குறுக்கிட்டு "என்ன மச்சான் சொல்லுறதை இழுக்காமல் சொல்லடா" என்றான்.

ஆதவன் ராசனின் கதையைக் கேட்டதும் "அப்ப என்ன "தமிழ்", "ரத்தம்", "தாய்க்குலம்" என்று சொன்னால்தான் உனக்கு விளங்குமோ..? எனக் கூறிவிட்டு இங்குள்ள அரசியல் நிலைமை மொழிப் பிரச்சினையால் விளங்காவிட்டாலும் ஊரிலே தானே நீயும் இருந்தனி சொல்லு பார்ப்பம்.

ராசன் ஒன்றும் பேசாது மௌனமானான். ஆதவன் "சரி மச்சான் தேர்தல் என்றால் ஒரு டென்சன் வருவது இயற்கைதான், பாருபா துண்டு கிடைத்திருந்தும் என்ன செய்வது எனத் தெரியவில்லை இதுதான் நிலைமை, ஊரிலே ஐம்பது வருடம் துண்டு போட்டும், எங்கடை சனம், ஏன்? எனக்குக்கூட என்ன செய்கிறது என்று தெரியவில்லை." என முடித்தான்.

சிறிது மௌனம். ராசன் சொன்னான் "கதையைவிடு, என்ன சமையல் இன்றைக்கு" என்றான். "அன்ன கோழிதான் என்றான் ஆதவன். வழமையான நாளாந்த வேலையில் இருவரும் மூழ்கினர்.

முற்றும்.

- சிவா -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாக்குரிமை

மாலை நேரம் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான் ஆதவன். டென்மார்க்கின் காலநிலைகள் திடீரென மாறியதால் அவனது இலேசான உடைகள் குளிரைத் தாங்கிக் கொள்ளப் போதுமானதாக இருக்கவில்லை. ஆதவன் தனது கவனக்குறைவை எண்ணி முன்பு இந்நாட்டின் காலநிலையையும் இந்நாட்டில் ...... நம்பவே முடியாது, என மனதுக்குள் முணுமுணுத்தவாறு கைகளை ஜக்கற்றினுள்ளே வைத்துக் கொண்டு வந்தாலும் குளிர் ஆதவனை விட்டு வைக்கவில்லை. பல சிரமங்களுக்கு மத்தியில் கைகளை விறைப்பகல உதறியவண்ணம் வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்றவனுக்கு முதல் நாள் மாலை சமைத்த [illegible] கறியின் வாசம் குப்பென்று மூக்கிலப் புகுந்தது.

என்ன இருந்தாலும் எமது மண்வாசனை என நினைத்துக் கொண்டாலும் மனதுக்குள் சற்று வெறுப்பாகவே இருந்தது. தனது ஜக்கற்றைக் கழற்றியபடி, காலையிலிருந்த பல வகையான விளம்பரங்களும், ஓர் இலங்கைக் கடிதமும், கொமுனின் தேர்தலுக்கான ஒரு துண்டும் அவன் கண்களில் பட்டது. அவைகள் மட்டும் எடுக்கநின்றாலும் கடிதங்கள் போடுவதற்கான கதவு இடைவெளியில் இன்னும் பல விளம்பரங்களும் இலவசத் தினசரிப் பத்திரிகையும் உள்ளுக்குள் வரமுடியாமல் தவித்தபடி இருப்பதைக் கண்ட அவன் "ஏதோ சரியான இக்கறைதான் இவன் வேலையால் வந்தவன் பரீட்சையில் பெயில் விட்டுவிடுவான் எனப் பழக்கப் போட்டிருக்கினம்" என நினைத்து மனதுக்குள் சிரித்தவண்ணம் கடிதத்தையும்,

www.tamilarangam.net

கொமுன் துண்டையும் எடுத்துக் கொண்டு கதவைச் சாத்திவிட்டு ஆர்வ மிகுதியால் கடிதத்தைக் கிழித்தபடி சோபாவில் உட்கார்ந்தவனுக்கு தம்பியாரின் கடிதம் கண்டு மிகவும் சந்தோசமடைந்தான். (இது இவனுக்கு மட்டுமல்ல இன்று டென்மார்க்கிலுள்ள எல்லோரது நிலையும் இதுதான்)

மூன்று மாதத்திற்குப் பின்னர் எழுதியிருந்தால் நாலு ஒற்றைகளில் நிறையவே எழுதியிருந்தான்.

அன்புள்ள அண்ணை! எனத்துவங்கி உறவினர்களின் சுகங்கள் அறிந்தவனுக்கு இடையில் ஒரு வரி.

"எங்கடை கந்தப்பு அப்பு வேலியடைக்கேக்கை அடியில் தாட்டுக் கிடந்த கைக்குண்டு தட்டுப்பட்டு வெடித்ததால் மேலே போட்டார்." என இருந்தது.

ஆதவன் முதற்கண் கவலைப்பட்டாலும் சிரிப்பாகவும் இருந்தது.

கந்தப்பு அப்புவை முந்தி ஆதவனுக்குத் தெரிந்த நாளிலிருந்து அவர் வேலி அடைக்கும் நாட்களில் பக்கத்துக் காணிக்காரருடன் சண்டை பிடிக்காத நாள் இல்லை என்பதும், காணியைக் கூட்டி அடைப்பதால் 'வட்ட விதான்' என ஊரவர் கதைப்பதும் அவனது மனத்திரையில் வந்து



இவர்: பிரச்சினை இல்லே, எனக்கு சிறந்தவர் சிலர் இடை கிருந்தானே....
மற்றவர்: என்னமாதிரியனா எனக்குச் சொல்லாம் லையப்பா....?
இவர்: இந்தமுறை நான் கொமேன் வச்சதுக்கு நின்று போட்டதந்தானே....
மற்றவர்: !!!!

போறதும் "காலம் தெரியாமல் இப்ப ஏன் இந்த வேலியடைக்கிற வேலை" என நினைத்துத் தொடர்ந்தவனுக்கு அடுத்த வரிகளும் சிந்திக்க வைத்தது.

"இப்பவுள்ள பிரச்சினைகளில் சனங்கள் வீடுகள் விட்டு கோயில் குளமென்று போயிருப்பதால் வீடுகளிலுள்ள அம்மி குழவிகளும் கூடக் காணாமல் போகுது"......

ஆதவன் தம்பியை ஒருகணம் நினைத்துப் பார்க்கின்றான். குறும்புத்தனமாகவும் நளினமாகவும் எழுதியிருக்கின்றான். அவனது நளினம் இன்னும் குறையவில்லைப் போல் என்பதை நினைத்தாலும் அம்மி குழவி எடுக்கின்றவர் ஒருபுறமிருக்க அதை வாங்குகின்றவர்களும் இருக்கின்றார்கள் என்ற வரிகள் ஆதவனின் மனதை ஒருகணம் தொட்டுச் சென்றது. நாட்டு நிலைமைகள் இப்படியிருக்க இப்படிப்பட்டவர்களுமா? எனக்கு என்ன தெரியும் நான் வந்து ஐந்து வருடங்களாகின்றது, எனத் தனது மனதைச் சமாதானப்படுத்திக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு, என்ன இருந்தாலும் தம்பியார் குத்துவதாக எழுதினாலும் நேர்க்கமாக இருக்காது, என மேலும் தொடர்ந்தான்.

இன்னும் சில தினங்களில் இந்தியத் தேர்தல் நடைபெறவுள்ளது, இதனால் இங்குள்ள எமது மக்கள் தேர்தலின் பின்பு சுமுகமான நிலைமை திரும்பும் என நம்புகின்றனர். என்ன இருந்தாலும் அண்ணை! இந்திய விஸ்தரிப்பு நடவடிக்கையில் எந்த வித மாறுதலும் இருக்காது. இந்திய மக்களும் இந்தத் தேர்தல் விளையாட்டில் அலுத்து விட்டனர். எமது நாட்டில் நடந்த தேர்தலும் தெரியும் தானே........

ஆதவனுக்குத் தம்பியாரை நினைத்து 'இவன் மடையன்...... இன்னும் ......காலம்......

கதவு தட்டும் சத்தம் கேட்டு தட்டுபவரை உள்ளே வரும்படி குரல் கொடுத்து விட்டு கழற்றிய ஜக்கற்றை சோபாவில் போட்டுவிட்டு யாரெனப் பார்த்தான் ஆதவனின் நெருங்கிய நண்பன் ராசன் வந்தபடியே 'என்ன மச்சான் கமதமா' எனக் கேட்டுவிட்டு பதில் எதிர்பார்க்காது, நிமிர்ந்து தனக்குத் தெரிந்த கெட்ட வார்த்தையில் திட்டி விட்டு என்டா புதினம் ஊரிலே" என்றான். ராசன் ராசனின் குண இயல்பை முன்னமே அறிந்து வைத்திருந்த ஆதவன் "பொறு படித்து விட்டுக் கூறுகின்றேன்" எனக் கூறிவிட்டு, விரைவாகப் படித்து விட்டு அவனது பொறுமையைச் சோதிக்காது "என்ன ராசன் இப்ப அம்பிகுழவியளும் காணமல்ப் போகுதாம். இனிவேலி கூட்டி அடைத்து காணி பிடிப்பவர்களும் அந்தத் தொழிலைக் கைவிடுவினம், எனக் கூறிமுடித்தான். இப்படிக் கூறியது ராசனுக்குத் தெளிவாக விளங்கவில்லை. ராசனின் விளங்காத நிலை கண்டு ஆதவன் விளக்கிக் கூறிய பின் ராசனின் குழம்புத்தனத்துக்கு இன்று நல்ல விசயம் கிடைத்தது என்று நினைத்தாலும் "என்ன ஆதவன் யாருக்குத் துண்டு போடப்போகின்றாய் எனக் கேட்டான். அவனது கேள்வியை சற்று அவதானித்த ஆதவன் தேர்தல் என்றால் அதற்குரிய டென்சன் இருக்கும் தான் என உணர்ந்தாலும், "என்ன ராசன் இப்பதான் வேலியால் வந்தனான்", எனக் கூறியபடியே கொடுமன் தேர்தல் துண்டை எடுத்துப் பார்த்துக்கொண்டு ஆதவன் சொன்னான். ஐம்பது வருடமாக எமது மக்கள் தங்களது துண்டுகளை மாறிமாறிப் போட்டும் என்ன பயன் கண்டார்கள் இன்னும் எமது மக்களின் மேல் கஷ்டம் மலைபோலத்தான் வளர்ந்துள்ளது. அங்கு அப்படி. ஆனால் இங்கு வந்து ஐந்து வருடம் தான், ஆனால் கொடுமன் தேர்தலில் வாக்களிக்க உரிமை கிடைத்துள்ளது.

(தொடர்ச்சி பக்கம்: 49)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




www.tamilarangam.net



www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி : 5



(போட்டியின் முடிவு திகதி 01.01.1990)

உங்கள் கருத்து:

அமுதுலகப்பாவலருக்கு:

உள்ளே மடியுங்கள்:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"CHANCHIVE" K&T: 5
Tamilsk Dansk Venskabsforening
Danmarksgade 10
7500 Holstebro.


afs. ______________________________

______________________________

______________________________

______________________________

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**CHANCHIVE**
Tamilsk Dansk Venskabsforening
Danmarksgade 10, 7500 Holstebro
Danmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்